[illegible].

1933 ௵

௴ 6 [illegible]. 12


ஐ

m2n, N27SN

N33.6.12

186929

m2n, N27 SN

1063


1063

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR ...
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு. § ஸ்ரீமுக-ஆடி : 1933-ஜூலை § திங்கள் கஉ.

உள்ளுறை


| | | பக்கம். |
|---|---|---|
| க. | செய்ந்நன்றி யறிதல் | 421 |
| உ. | மதிப்புரை மஞ்சரி | 423 |
| ௩. | நன்கொடை | 424 |
| ச. | செய்கோன் | 425 |
| ரு. | வரலட்சுமி விரதபலன் | 428 |
| சு. | பெருஞ்சித்திரனார் | 429 |
| எ. | திருநெல்வேலி ஜில்லா ஸநாதனதர்ம மகாநாடு | 433 |
| அ. | சமயவாழ்க்கையும் தமிழர் நாகரீகமும் | 438 |
| கூ. | ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். டி, முத்துசாமி ஐயர் | 440 |
| ௰. | உண்மை முத்தி | 443 |
| கக. | சிவபெருமானே தியானிக்கற்பாலர் | 445 |
| கஉ. | நிலக்கிழார்கட்கு அறிக்கை | 448 |
| க௩. | 'சிவம்' என்பதின் கருத்து | 449 |
| கச. | திருப்பெருந்துறை மேவிய சிவனே! | 450 |
| கரு. | அன்பினில் இன்பு | 457 |
| கசு. | சிவநேசனுக்கு வாழ்த்து | 460 |
| கஎ. | திருகழுக்குன்றச் சிலேடை (9—16). | |


ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

உ

# செய்தித் திரட்டு.

உள்ளூர்:—குமாரவிநாயகர் திருக்கோயிலில் நடராஜப்பெருமானுக்கு ஆனிமீ ௧௰௳ நடைபெற வேண்டிய ஆனித்திருமஞ்சனத் தெரிசனம் முதனாள் மாலையிலேயே நடந்தேறியது. திருவாசகப் பாடசாலையில் ஆனி ௧௫௳ ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூஜையும், அப்பெருமானின் திருவுலாவும் நடைபெற்றன. இம்மதி ௧௫௳ சுவாதிநாள் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை நடைபெறும்.

சிவாலயத்தில் ஆனி ௧௰௳ உத்தரநாட்காலை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருமஞ்சனத் தெரிசனம் உபயக்காரரால் நடைபெற்றது.

இலக்ஷுமி ஸ்பெஷல் ரயில்:—ஆடிமீ ௧௧௳ செட்டிநாட்டு ஸ்டேஷனிலிருந்து பிரயாணமாகிப் பல திருத்தலங்களின் வழியாய் காசி இராமேசுவரம் போய், புரட்டாதி ௨௨௳ செட்டிநாடு வந்து சேரும். இதை நடத்திவைப்பவர்பு துவயல் திரு. மு. வீர. முத்துக்கருப்பன் செட்டியார் ஆவர்.

பரிமணங்குடி:—சண்முக நாதசுவாமி கோயிலில்,வைகாசி ஆனிமாதக் கார்த்திகைநாட்களில் அபிடேக ஆராதனைகளுடன் பிரசங்கங்களும், ஆனி ௧௰௳ சைவசன்மார்க்க சங்கத்தில் சிவநேசச் செல்வர்களான.—காரைக்குடி சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்; முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார் ஆகிய இருவரால் கந்தவேள் மகிமையைப்பற்றியவிரிவுரைகளும் நடைபெற்றன. கோட்டையூர் சிவநேசச்செல்வர் வெ. நா. இலக்குமணச்செட்டியார் புத்தகப்பரிசு வழங்கினர் என ஷை கோவில் சபைகளின் உரிமையாளர் வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளை தெரிவிக்கிறார்.

மகாகும்பாபிஷேகங்கள்:—பழநியம் பதியில் தண்டாயுதபாணிக்கு ஆனி ௧௰௳ யும், திருவியலூரில் சாந்தநாயகி சமேத யோகாநந்தேசுவரருக்கும், திருக்குற்றாலத்தில் குழல்வாய்மொழி யம்மை சமேத குறும்பலா நாதருக்கும் ஆனி ௧௯௳ யும், திருவகத்தியான்பள்ளியில் பாகம்பிரியாநாயகி சமேத அகத்தீசுவரருக்கு ஆனிமீ ௨௩௳ யும், அருணையம் பதியின் வடபால் 15 மைல் தூரத்திலுள்ள பழங்கோயில் என்று வழங்கும் பழங்கொள்ளூரில் இளம்பருவ மங்கை சமேத பழங்கொண்ட நாதருக்கு ஆனி ௨௬௳யும் மகாகும்பாபிஷேக மகாபிஷேக திருவுலாவாதியன சிறப்பாக நிறைவேறின.

ஸ்ரீ. வி. ரா. நாய்கர்:—கடன்சிறையிலிருந்து சுகவீனங் காரணமாக வெளிப்படுத்தப் பட்டார்.

மதுரை:—வர்த்தகர்கள் ஒவ்வொரு தமிழ்மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமையை விடுமுறையாகக் கொண்டிருக்கின்றனர்.

லேப்ட்டான்:—ராம. நா. கடையின் சமையற்கார சின்னையா என்பான் மலக்கூடத்தில் அரைக்காற்படி மலந்தின்று,சு.அரு.கடையின் சமையற்கார முத்தையா என்பவனிட மிருந்து ஐந்து ரூபா பெற்றானாம். இப்பந்தய விழாவுக்கு ஐம்பது பேர்கூடினராம். இவர்கள் எல்லாரும் கனத்த புத்திமான்கள்தான். இவ்வித புத்திமான்கள் விருத்தியானால் என் சுயராஜ்யம் [illegible]து என ஒருவர் அறிவிக்கிறார்.

186929

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௯ } பலவான்குடி—ஸ்ரீமுக—ஆடி { திங்கள் ௧௨.

OFFICE OF THE ... 16 FEB 1934 MADRAS

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ளடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## செய்ந்நன்றி யறிதல்.

செய்ந்நன்றி யறிதல் என்பது, கடவுளும் ஆன்மாக்களும் நமக்குச் செய்த செய்கின்ற செய்யும் நன்றியையும், நாம் கடவுளுக்கும் சீவர்களுக்கும் திருப்தியாகச் செய்யவேண்டிய நன்றியையும் அறிய வேண்டுமென்பது பொருளாகும். அவ்வாறு அறியுங்கால், வினைக்கீடாகத் தனுகரண புவன போகங்களைத் தந்து, இம்மை மறுமை யின்பங்களை யருளுகின்றவரே ஆண்டவன் எனவும், நாமெல்லாம் அவரது அருளாணைவழிச் செலுத்தப்பெறுகின்ற அடிமைகள் எனவும் ஓர்ந்து வழிபாடு செய்து, அநாதி நித்திய வியாபகராகிய ஆண்டவனோடு அநந்நியமாக ஒன்றி,திருவருளின்பம் பெறக்கூடு மென்பது நன்குபுலனும். ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயங்களால் செய்யும் நன்றியும் பலதிறத்தனவே. இவ்வாறு கடவுளும் ஆன்மாக்களும்செய்யும் நன்றியையென்றும் மறவாதவர்களாக மேலான மக்கள் யாக்கையைப் பெற்ற நாம், உலகத்திற்கும் உலகாதீதனுகிய கடவுளுக்கும் திருப்தியாகச் செய்யவேண்டிய நன்றிகளை நன்றாகத் தேர்ந்து செய்து, எடுத்த யாக்கையின் பயனை இனிதேபெறல் வேண்டும்.

இங்ஙனமாகச் செய்ந்நன்றியறிதலைத் தெளிந்து செய்வதனுள் தலையாயது, தமது சமயமும் தாய்மொழியும் வளர்த்தலேயாம். சமயஞானம் பாஷாஞானம் என்னும் இரண்டு கண்களும் ஒருவருக்கு

இல்லாதொழியின் அக்க் குருடராய்த் 'தக்கவின்ன தகாதன வின்ன வென்று' பகுத்தறியமாட்டாத மிருகப்பிராயமாகவே கருதப்பெறுவராதலின், செய்ந்நன்றிகளுட் சிறந்தன மக்களை மேனிலைக்குக்கொணரும் சமயஞானமும் பாஷாஞானமும் என்பதே உறுதி.

நமது சைவ வுலகத்தில்—தமிழுலகத்தில், சைவமுந் தமிழுந் தழைத்தற்கெனத் தொண்டாற்றும் புதினத்தாள்கள் சிலவே. அவற்றுள், நமது சிவநேசன் முன்னணியில் நின்று, போலிக் கொள்கைகளைத் தாக்கி உள்ளதை யுள்ளவாறு நிலைநிறுத்தி வருதலை, சிவநேசச் செல்வர்களும் செந்தமிழ்ச் செல்வர்களும் நன்கறிந்ததே.

இவ்வாறாய நம் சிவநேசன் இத் திங்களுடன் ஆறாவதாண்டு நிறைவைப்பெறுகின்றான். இவ் வாண்டு முதல் சிவநேசன் புத்தக வடிவமாக அழுத்தமான காகிதத்தில் திருத்தமாகப் பதிப்பிக்கப் பெற்றுவரும் பயனாக, அரிய பெரிய கட்டுரைகளும், சங்கரலிங்க வுலா ஆதிய சிறந்த நூல் வெளியீடுகளும் தொகுதியாக மிளிர்வதாயின.

சிவநேசனுக்கு ஆதிமுதல் வாழ்த்துப்பாக்களும் மதிப்புரைகளும் கட்டுரைகளும் நூல்வெளியீடுகளும் நிகழ்ச்சிக் குறிப்புகளும் நன்கொடைகளும் ஆண்டுத்தொகைகளும் அதற்கென மூலதனங்களும் பிறவும் உதவியும், உடனிருந்து உழைத்தும் ஆதரித்து வருகின்ற அன்பர் பலர்க்கும், அவர்களின் செய்ந்நன்றியை மிகப் பாராட்டி நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேலும் நமது சைவமும் தமிழும் உய்வதற்கான முறையிற் பத்திரிகையுலகம் விர்த்தியாகும்படி பலவாற்றானும் வேண்டும் உதவிகள் புரியவும், நமது சிவநேசனை அன்புடன் பாராட்டிச் சீரும் சிறப்பும் பெற்றோங்கத் தங்கள் தங்களா லியன்ற நன்றியை மறவாது செய்யவும், ஆவணித் திங்கள்முதல் வரும் சிவநேசன் ஏழாவதாண்டுக்கு உரிய கட்டணத்தையும், இதுவரை சேரவேண்டிய ஆண்டுத் தொகைகளையும் செலுத்தவேண்டியவர்கள் செலுத்திச் சிவநேசனை மேன்மேலும் செழித்தோங்கச் செய்து, செய்ந்நன்றி யறிதலை யிருபாலும் மேற்கொள்ளவும் செய்வான், பத்திரிகாபரமேசுவரர் என்னும் திருவேடகநாதர் திருவருளைப் போற்றுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

# மதிப்புரை மஞ்சரி.

## ஞாயிறு.

மலர்தலை யுலகில் இலகொளி பரப்பிப் பல பொருள் விளக்கும் பரிதியோடொப்ப, யாழ்ப்பாணக் கலாநிலையமாங் கனிதமிழ்க் கடல் வயிற்றோன்றிப் பல்கலைக் கதிர்த்திரள் சொல்வகை விரித்து உயிர்கட்குறுதிப்பொருளுண்மையும் உணர்த்துவா னெழூஉ, மாயிரும் புகழ் சேர் 'ஞாயிறு' என்னுங் கலையாக்கங் கருதிய பருவ வெளியீட்டின் இளவேனிற் கதிரொன்று எம்பால் வீசப்பெற்று, உளநனி பூத்து உவகையுற்றேம். வித்தகின்றி விளைவித்தன்மான, முதலைவாய்க் குதலை மதலைவரப் பாடிய சுந்தரப்பெருமான் திருவுரு வோவியத் திறனை முகத்திற்கொண்டு, அளப்பரும் புலமைசால் அறிஞர்களின் விழுமிய உரைநடைகெழுமிய கட்டுரைகள் பலவும் அகத்திற் கொண்டு, உயரிய வொள்ளிய கடிதத்திற் றெள்ளியமுறையி லச்சிடப்பெற்று, அருங்கலை விநோதர்களின் கரத்திற் கேற்ற அணிகலனென அமைந்துள்ளது. செந்தமிழ் செழிக்கவும் சைவநெறி தழைக்கவும் கருதித் தொண்டாற்றுங் கடப்பாடுடைய எம்மனோர்க்கு, இத்தகு எழிற்கலை யென்றாழ்கள் எட்டுத் திசையும் பதினாறு கோணமும் ஆகிய எங்குந்தோன்றி, ஆங்கிலப் படல நீங்கிடக் கீறிப், புத்தமிழ் தொத்த முத்தமிழ்ப்பயிர் பொலிவுற்றோங்கச் செய்யவேண்டுமென்பது பேரவாவாகும். இதன் ஆண்டுத்தொகை ரூ 4; தனிக்கதிர் அணா 12.

## நெஞ்சுவிடு தூது.

சிரவணபுரம் கௌமார மடாலயம் உயர்திரு இராமாநந்த சுவாமிகள்மீது, வண்ணச் சரபம் உயர்திரு தண்டபாணி சுவாமிகளின் பௌத்திரர் திரு. தி. செ. முருகதாச பிள்ளையவர்கள் இயற்றியது. குருபத்தியைத் தெருட்டுவதாகும்.

## விசுவநாதர் திருப்பணி முறையீட்டின் சிலபகுதி மறுப்பு.

இது, தேவகோட்டை திருவாளர் வெ. ஆ. தி. சிதம்பரம்செட்டியாரவர்கள் வெளியிட்டுள்ள 'விசுவநாதர் திருப்பணி முறையீட்டு'க்குத் திருவாளர் தி. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியாரவர்களால் எழுதப்பெற்றது. அவர்களுக்குள்ள சில விவாதங்களைப் பற்றியே சில பகுதியை மறுப்பதாகும். மேலும், சாஸ்திர விதியைப்போல அநுட்டானத்தையும் தழுவக் கூடாதா? என்பதே இதன் நோக்கம்.

## சிராத்த தீபிகை.

இஃது, அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களால் பல நூல்களிலிருந்து சாரமாகத்திரட்டி, அவர்களின் திருவளர் செல்வர் வைத்தீஸ்வர சர்மா அவர்களாற் பதிப்பிக்கப்பெற்றது. சிராத்தம் சுருதிமுறைப்படி பெரியோர்கள் ஆசாரணையில் நிலைபேறுள்ள தென்பதும், இடைக்காலத்து எவராலும்உண்டுபண்ணப் பட்ட தல்லவென்பதும், அநுட்டிக்கும் மார்க்கமும், கடமையும், பிறவும் கிரமமாகப் பல நூற்பிரமாணங்களுடன் தெளிவாய் விளக்கப்பெற்றுள்ளன. சிராத்தத்தைச் சிரத்தையுடன் செய்வோர், புறக்கணிப்போராகிய இருதிறத்தாரும் வாங்கிப்படித்து, தங்களின் பிற்றோன்றல்களையும் படிக்கச்செய்து, பிதிரர்களைக் கரையேற்றித் தாங்களு மீடேறுவதற்கு உரித்தாயுள்ளது. இதன் விலை சதம்—கரு.

## மூவர் பாமாலை.

கோநகர் திரு. பி. மு. ராம. இராமசாமி செட்டியார், அவரது பெரியகுருவின் கிருபையால் பாடி யரங்கேற்றியதாம். கடவுளரை எப்படியாயினும் பாடவேண்டுமென்ற கருத்துக்கொண்டு பாடியதற்கு, 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும்' முருகவேள் கிருபை கூர்ந்து பாடுந்திறன் அருள்வாராக!

[மேற்காட்டிய ஞாயிற்றின் கதிரையும், நெஞ்சுவிடுதூது முதலிய நூற்களின் பிரதிகள் ஒவ்வொன்றையும், எமது பார்வைக் கனுப்பிய ஆசிரியர்கட்கு எமது நன்றியென்றும் உரியதாகுக. ப—ர்.]

---

## நன்கொடை.

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத்ஞானியார் மடாலய கர்த்தர் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், தமது அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா வைபவத்தில், நமது சிவநேசனைப் பாராட்டி சிவநேசன் வளர்ச்சி கருதி ரூபா இருபத்தைந்து நன்கொடை யுதவியுள்ளார்கள். சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கச் செய்வதையே திருவுளத்திற்கொண்டுள்ள பெரியார்கிருபைகூர்ந்து ரூபா இருபத்தைந்து கோடியெனச் சிவநேசனுக்கு அருளிய நன்கொடையைப் பெருமகிழ்வுடன் பெற்று, அப்பெரியாரது பேரருளைப் பெரிதும் போற்றித்துதித்து, அவர்களது இசையும் அவர்களருளிய திருவும் பரவிப் பெருகிப் பல்லாண்டு நிலவ, எல்லாம் வல்ல இறைவராகிய சிவபரம்பொருளைத் தியானித்து வழுத்துகின்றேம். (ப—ர்)

---

உ

# செய்கோன்.

---

### நாட்டுக்கோட்டை நகரத்தார் தீர்மானங்கள்:

இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதாரக் கஷ்டத்தினின்றும் நிவர்த்தித்துக்கொள்வான்வேண்டி இவண் உள்ள நகரத்தார்கள் ஆனித்திங்கள் கூ-ம் நாள் கூட்டத்தில், அடியிற்கண்ட விஷயங்கள் நாளிது ஆவணித்திங்கள் 4 ம் நாள் கூடவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு இப்பகுதியிலுள்ள சகல நாட்டின் நகரத்தார்களும் வந்திருந்து ஓர் முடிவு செய்துகொள்வதெனவும், அந்நாள் வரை தவணைக்கு வாங்கியிருக்கும் பணங்கட்கும் தனது மாறல் பணங்கட்கும் வட்டிப்பாக்கிகளைச் கொடுத்துவருகிறதெனவும், அவ்வாறு வட்டிப்பாக்கிகளைக் கொடுக்காது வசூலாகும் தொகைகளைத் தாய்நாட்டிற்கோ வேறு பிரதேசங்கட்கோ அனுப்பிவருவதாகத் தெரியும்பக்ஷத்தில் அக்கடைகளின் கணக்குகளைப் பரிசோதனை செய்து அதற்காகவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டதோடு, கணக்குகளைப் பரிசோதனை செய்வதற்காக (1) திரு. பி. கு. நா. அண்ணாமலைச் செட்டியார் (2) திரு. நா. மா. முத்தையாசெட்டியார் (3) திரு. தெ. கி. தெ. நா. மெய்யப்ப செட்டியார் (4) திரு. அ. உ. இராமசாமி செட்டியார் ஆகிய இந்நான்கு பெயர்கள் கொண்ட கமிட்டியையும் நியமித்திருக்கிறது.

### ஆவணி சஉ கூட்டத்தில் ஆலோசிக்கப்பெறும் விஷயங்கள்:

(1) தவணைப்பணங்களும் தனது மாறல் பணங்களும் கொடுத்து வைத்திருப்பவர்கள் வியன் வட்டி யில்லாது 90 நாள் தவணைவட்டிப் பிரகாரம் வட்டிகளை வாங்கிக்கொள்ளுகிறது.

(2) வசூலாகும் தொகைகளை ஒழுங்காகக் கொடுத்துவருபவர்களிடம் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது பொறுமதியாக வாங்கிக்கொள்ளுகிறது.

(3) இந் நாட்டிலுள்ளவர்கள் கடன் கொடுக்கவேண்டுவது அதிகமிருப்பதை முன்னிட்டு இந் நாட்டிலோ, வேறு தாய்நாட்டிலோ தங்கள் தங்களின் சொத்துக்களையும், தாங்கள் தாங்கள் கடன்கொடுத்து வைத்திருக்கும் இனங்களையும்,பிறரொருவர் பெயருக்குப் பிரகடனம் செய்து வைத்திருப்பார்களேயாமாகில், அவைகளை மேற்கண்ட கமிட்டியிலுள்ள நால்வரும் திரும்ப அவரவர்கள் பெயருக்கு மாற்றிக்கொள்ளச் செய்கிறது.

### பிரஷ்டஉத்தரவு ரத்து: செட்டிநாட்டுக் குமாரராஜா அபிப்பிராயம்:

இந்தோ - சீனாவிலேயே இன்னும் இருந்துவரும் இரு செட்டியார்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட பிரஷ்ட உத்தரவு பிரிட்டிஷ் சர்க்காரின் முயற்சியால் ரத்துச் செய்யப்பட்டதாகக் காமன்ஸ் சபையில் கூறப்பட்ட செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தோ - சீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் நான்கு செட்டியார்கள் முக்கியமானவர்கள். அவர்களி

லிருவர் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டனர். இன்னும் இருவர் வெளியேற்றஉத்தரவு ரத்துச் செய்யப்படுமென்ற நம்பிக்கையுடன் சிங்கப்பூரில் காத்திருக்கின்றனர். இவ் வுத்தரவுகளும் ரத்து செய்யப்பட்டாலல்லாமல் இந்தோ சீனாவிலுள்ள பாங்கர்களுக்கு நம்பிக்கை ஏற்படாது. பிரிட்டிஷ் சர்க்கார் வெளிநாட்டு இலாக்கா அதிகாரிகள் இவ்வுத்தரவுகளை ரத்துச் செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறுவதோடு, செட்டியார்களுக்குப்பாதகமான ஒப்பந்தங்களைப் புகுத்தாதிருக்குமாறு பிரெஞ்சு சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று இவ் வகுப்பார் கருதுகின்றனர். சமரச முயற்சிகளைப் பிரிட்டிஷ் சர்க்கார் இன்னும் தொடர்ந்து நடத்துவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது விஷயமாய் இந்தியா சர்க்காருக்கும் சென்னை மாகாண சர்க்காருக்கும் இந்தியா மந்திரிக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தால் விண்ணப்பம் அனுப்பப்படுகிறது.

பிரஞ்சு கௌன்சில் தலைவருக்கு மகஜர்:

கொச்சின் சைனாவில் லேவாதேவி செய்துவரும் நாங்கள் கீழ்க்கண்ட விஷயங்களைத் தங்களுக்குத் தெரிவித்து, எங்கள் குறைகளைக் கேட்டு நியாயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

கொச்சின் சைனாவில் இருவகை லேவாதேவிகள் நடைபெறுகின்றன. ஒன்று, பெரிய பாங்குகள் முதல்தரமான உத்தரவாதத்தின் பேரில் கடன் கொடுப்பது. இந்தலேவாதேவியில் சாதாரணமாகப் பணத்திற்கு ஆபத்தே கிடையாது. மற்ற வகையோ, இரண்டாவதும் ஆபத்துக்குள்ளாகக் கூடியதுமான உத்தரவாதத்தின் பேரில் அளிக்கப்படும் கடன். இவற்றிற்கு ஆபத்து நேரக்கூடும்.

இரண்டாவதாகக் கூறப்பட்ட லேவாதேவியே நாங்கள் நடத்திவருகிறோம்.

பிரெஞ்சுக் குடியேற்றக்காரர்களை நீங்கள் கேட்பீர்களானால் அவர்களுடைய செல்வ நிலைமை அபிவிருத்தி யடைவதற்கு நாங்களே காரணமென்பதையும், கேவலம் அவர்களுடைய கையெழுத்தை மாத்திரம் நம்பியே நாங்கள் கடன் கொடுத்தோ மென்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள்.

திரும்பி வருவார்களென்ற நம்பிக்கைக்கிடமின்றி எங்கள் கடன்காரர்களில் பலர் திடீரென பிரான்சுக்குப் போய்விடுவதாலும், இந்தப் பிரதேசத்தின் உஷ்ணம் தாங்கமுடியாமல் அவர்களில் பலர்இறந்துவிடுவதாலும், நாங்கள் எவ்வளவு நஷ்டத்திற் குள்ளாகிறோம் என்பதை எடுத்துச்சொல்லத் தேவையில்லை.

தொழில் முறை:

கடன் வாங்குவோரின் நாணயம் நம்பிக்கை தவறாது பணத்தைச் செலுத்தும் குணம். இவற்றைக் கருதியே நாங்கள் ஆட்களின் நிலைமைக்குத் தகுந்தவாறு ஆரம்பத்தில் குறைந்த வட்டிக்கு லேவாதேவி செய்து வந்திருக்கிறோம். பெரிய தொகை கடன் வாங்கக்கூடிய நிலைமையை அவர்கள்அடையும்வரை நாங்கள் இவ்வாறு உதவிபுரிந்து வந்திருக்கிறோம்.



தவணை தவறிவிட்டால் பெரிய பாங்கிக்காரர்கள் கடன்காரர் வீட்டுக்கு உடனே பெயிலிப்பை அனுப்பி விடுகிறார்கள். இந்தக் காரியத்தை நாங்கள் ஒரு காலத்திலும் செய்ததில்லை. பெயிலிப்பை அனுப்பாமல் தீராது என்ற நிலைமை ஏற்பட்டால் அப்பொழுதுகூட மிகுந்த மனக்கஷ்டத்துடன்தான் நாங்கள் இக் காரியத்தில் இறங்குகிறோம். இது எங்களுடைய கட்சிக்குச் சாதகமான ஒரு விஷயமாகும்.

தவணையில் பணத்தைச் செலுத்த முடியாது போய்விட்டதால் இனித் தங்களுக்கு பாங்கிகளில் கடன் கிடையாதென்று நினைத்து எங்கள் உதவியைத் தேடிவந்த வியாபாரிகளும் தோட்டக்காரர்களும் விவசாயிகளும் பலராவர்.

ஐரோப்பிய பாங்கிகளில் சரியான உதவியில்லை யென்பதைத் தெரிந்து அன்னம் வாசிகள் எங்கள் உதவியைக் கோருகின்றனர். அவர்களுடைய கஷ்ட நிலைமையை நன்றாக அறிந்துகொண்டு அவர்களுடைய பூர்வோத்தரத்தையும் தொழிலையும் கவனித்து; கூடுமான உதவியை நாங்கள் அவர்களுக்கு அளித்து வருகிறோம்.

பல பெரிய கம்பெனிகள்கூட சிற்சில சமயங்களில் எங்கள் உதவியைக் கோரியதுண்டு. பிரான்சுக்கு வெகுதூரத்திற் கப்பாலுள்ள இவ்விடத்தில் ஜனங்களுக்கு அவசியமான கடன் கொடுத்து உதவி செய்து வரும் எங்களுக்கு நியாயம் வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மூலதனம்:

கோடிக்கணக்கான டாலர்களைக்கொண்டு இந்தப் பிரதேசத்தில் நாங்கள் லேவாதேவி செய்து வருகிறோம். வர்த்தகத் தொழில் முன்னேற்றத்திற்கு நாங்கள் விசேஷ உதவியை யளித்திருக்கிறோம். இத்துணையும் செய்துதான் இங்கே நாங்கள் சில உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். அந்த உரிமைகளையும்கூடப் பறித்துவிடக் கூடாதென்று நாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

1932-ம் வருடம் வரையிலும் நாங்கள் இவ் வுரிமைகளை அனுபவித்துவந்திருக்கிறோம். ஆனால், 1933 மார்ச்சு 24-ந்தேதி முதல் ஸ்ரீமான்கள் நாகப்ப செட்டியார், பழநியப்ப செட்டியார், மெய்யப்ப செட்டியார், பிச்சப்ப செட்டியார் ஆகியோர் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

மனுக்களெல்லாம் வீண்:

இச் செய்கையை எதிர்த்து நாங்கள் மனுச்செய்து கொண்டதெல்லாம் வீணாயிற்று. நாங்கள் இங்கே தொந்தரவுகளை விளைவித்து விட்டதாக இந்தோ-சைனா இம்பீரியல் சர்க்கார் கூறினார்கள். இது வெறும் கட்டுக் கதையே யன்றி வேறல்ல.

நாங்கள் உண்மையில் பொதுக் கூட்டங்களிலாவது அரசியல் விஷயங்களிலாவது கலந்து கொள்ளாமல் சட்ட வரம்புகளுக் குட்பட்டே நடந்து வருகிறோம்.

தற்கால பொருளாதார மந்தத்தை யுத்தேசித்துக் கடன்காரர்களுக்கு நீண்டகாலத் தவணைகளும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். எல்லாப் பாங்குகளும் கடனை வசூலிப்பதற்கு நடவடிக்கைகளெடுத்துக்கொள்ளுகின்றன. அப்படியிருக்க ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரை மட்டும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதினின்றும் தடை செய்வது நியாயமாகாது.

ஸ்ரீமான்கள் நாகப்ப செட்டியாரும், மெய்யப்ப செட்டியாரும் லாண்டட் லோன் ஆபீஸ் உத்தரவுப்படிதான் கடன்காரர்களின் சொத்தை ஜப்திசெய்யப் புகுந்தார்கள். ஸ்ரீமான் பழநியப்ப செட்டியார் பேரிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. லெபாட்வின்ஹ் தூண்டுதலின் பேரிலேயே ஸ்ரீமான் பிச்சப்ப செட்டியாருக்கு பிரஷ்ட உத்தரவு அளிக்கப்பட்டது. லெபாட்வின்ஹ் என்பவர் கடன்காரர்களை மோசம் செய்யும் நோக்கத்துடன் சொத்துக்களை வில்லங்கம் செய்ததாக, ஹைகோர்ட்டார் ஸ்ரீமான் பிச்சப்ப செட்டியார் சார்பில் தீர்ப்பளித்திருக்கின்றனர். இப்படியிருக்கவும், மேற்கூறியவர்களை வெளியேற்ற வேண்டிய அவசியமே ஏற்படவில்லை.

இந்தவிஷயத்தில் எங்களுக்கு நியாயங் கிடைக்கவேண்டுமென நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

---

## வரலட்சுமி விரத பலன்.

மகததேசத்தில், குண்டலி புரத்தில், சாருமதி யென்னும் பிராமணநங்கை தன் கொழுநனையே தெய்வமாகக்கொண்டு, கணவன் குறிப்பின்வழி ஒழுகினள். கற்புக்கரசியாகிய அவளிடத்துத் திருமகளுக்குப் பிரியமுண்டாகி அவள் சொற்பனத்திற் றோன்றி, "நான் வரலட்சுமி. உன்மீது கருணையால் உனக்குப் பிரத்தியக்ஷமானேன். ஆடி மாதம் பௌர்ணிமைக்கு முன்வரும் சுக்கிரவாரத்தில் என்னை வழிபாடு புரிந்து விரும்பிய வரங்களைப் பெறுவாயாக!" என்றருளினள். சாருமதி திருமகளைப் போற்றி, அவள் திருவாய் மலர்ந்தருளியபடி, ஆடிமாதப் பௌர்ணிமைக்கு முன்னதாகிய வெள்ளிநாளில் இல்லந் திருத்தி மண்டப மமைத்து கோமயத்தினால் மெழுகிப் பீடமிட்டு அக்ஷதை பரப்பிக் கலச மமைத்து அதில் வரலட்சுமி தேவியை ஆவாகனம் செய்து பயபக்தியோடு சோடசோபசாரங்களுடன் ஆராதித்து விரதவிழாக் கொண்டாடினள். வரலட்சுமிதேவி அருள்சுரந்து சாருமதிதேவிக்கும், அவளைச் சார்ந்து அவ் விரதத்தை அநுட்டித்த மற்றைய நங்கைமார்க்கும் அஷ்ட ஐஸ்வரியங்களும் கடாக்ஷித்தனள் என்று வரலட்சுமி விரத மகாத்மியம் கூறுகிறது.

நல். கண்ணப்ப முதலியார்.

---

உ

## பெருஞ் சித்திரனார்.

[கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.]

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர்பெருமான், இற்றைக்குப் பலநூறு ஆண்டுகட்கு முன்னர் தமிழகஞ்செய்த தவப்பயனாய்த் தோன்றினார். தமது இளம்பருவத்திலேயே தமிழ்நூல்களைத் தெளிவுபெறக் கற்றுச் சிறந்த புலவராக விளங்கினார். இவரது ஒப்புயர்வில்லாக் கல்வி யறிவின் றிறம் தமிழ்நாடு முழுவதும் பரவத்தலைப்பட்டது. இவருக்கு மணப்பருவ முற்றதை யறிந்த தாய்தந்தையர், தங்கள் குலத்திற்கேற்பச் சிறந்ததொரு நற்குடியிற் பிறந்த நங்கையொருத்தியை இவருக்கு மணம்புரிவித்தனர். இவர், தாய் தந்தையர் கட்டளைப்படியே தம் இல்லக்கிழத்தியுடன் இல்லறம் இனிது நடாத்தி வந்தார். சில ஆண்டுகளுள் நம் புலவர், புத்திரர் பலருக்குத் தந்தையாகும் பதவியைப் பெற்றார்.

தமது இளமைப் பருவமுதலே நூலாராய்ச்சியிற் பொழுதைப் போக்கியபுலவர், அத்துறையிலேயே பின்னும் பொழுதைக்கழித்து வந்தனரேயன்றித், தம் குடும்பத்திற்கு வேண்டும் பொருள்களைச் சம்பாதித்தலிற் கவனமில்லாதிருந்து வந்தார். அதனாற் புலவரது குடும்பத்திற்கு 'வறுமை' என்னும்நோய் உண்டாயிற்று, 'நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே, பூவின் கிழத்தி புலர்ந்து" என்பது முதுமொழியன்றோ? அதன்படியே கலைமகள் நின்று தாண்டவமாடும் நம் புலவர் குடும்பத்தை, அலைமகள் அணுகாதிருந்தாள்.

வறுமையால் வாடும் மனைவிமக்களைக்கண்ட பெருஞ்சித்திரனார் வருத்தமிகவுடையரானார். ஆருயிர் மருந்தாகிய 'சோறு' இன்றேல், உயிர்வாழ்வதெப்படி யென நினைத்து இவ்வாறு யோசிப்பாராயினார்.—வெட்கமும், மேற்குலப்பெருமையும், கல்வியும், வள்ளற்றன்மையும், அறிவுடைமையும், தருமமும், தவமும், உயர்ச்சியும், முயற்சியுடைமையும், சிற்றின்பமுமாகிய இவைகளெல்லாம், பசிப்பிணி வருங்காலத்துப் பறந்தோடிவிடும். இதனாலேயே ஔவையார்,

'மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்."

எனக் கூறியிருக்கின்றனர். ஆதலின், பசிப்பிணி நீங்கத் தக்கவழி செய்தாலன்றி, நமக்குச் சுகங்கிடைப்பது இயலாதகாரியமாகும். அவ்வாறு செய்வதற்குப் பொருள்வேண்டும். யாசித்துப் பொருள் பெறலாமென்றாலோ, 'ஏற்பதிகழ்ச்சி' முதலாகப் பலவிடங்களில் யாசித்தல் இழிவெனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலின், நம்மிடத்திலுள்ள பொருளாகிய கல்வியைச் செய்யுட்களாகஆக்கிச் செல்வப்பொருளுடையாரிடத்துக்கொடுத்து

அவரிடமிருந்து பெறும் செல்வப் பொருள், பண்டமாற்றாகுமே யன்ற யாசகப்பொருளாகாது. அவ்வாறுசெய்தலே நலமாகும் எனத் தீர்மானி தார்.

இவ்வாறு தீர்மானித்த புலவர், 'செல்வப் பொருளுடையார் யாவரு செல்வராகமாட்டார்கள். எட்டிமரம் அழகான பழங்களைக் கொண்டிரு பினும், அதனாற் பிறருக்குச் சிறிதுமுபகாரமில்லை. ஆதலின், பாட்டு ரையும் பயிலாத விரண்டோட்டைச் செவியுடையாரிடத்துச் செய்யு மிழ்தத்தைச் சேர்த்தல் தீதுடைத்தாகும். தமிழின்பெருமையையும், தமி ப்புலவரின் பெருமையையும் அறிந்து, அவா வேண்டுவன கொடுத்த வள்ளல்கள் எனப்பெயர்பெற்ற எழுவருள், 'அதிகமானெடுமானஞ்சி' என் னும் வள்ளல் நீங்கலாக மற்றைய அறுவரும் வானுலகெய்தினர். அஞ்சியுள் அஞ்சியையடைந்தால் நம்வறுமைநோய் நம்மினின்றும்விலகி ஓடும்.' என னைத்து அவனைக்காணுதற்குப் புறப்பட்டுத் தகடூரை யடைந்தார்.

அடைந்தவர், அஞ்சியைக் காணுவதற்குச் சிலநாட்கள் காத்திருக் வேண்டியதாயிற்று. பின்னர், பரிசில் வேண்டி வந்திருக்கும் புலவரை அஞ்சி நேரிற் காணாது, தனது ஏவலாளரிடம் பரிசிலைக்கொடுத்து அவருக் களிக்கும்படி விடுத்தான். அதுகண்ட புலவர் கோபமிகக் கொண்டாராய் பரிசில் கொண்டுவந்த ஏவலாளனை நோக்கி, 'யான் இலாபங் கருதிவந்த யா சகனல்லன். என்னுடைய கல்வியறிவால் அரசனை மகிழச் செய்து, அவ னிடம் பரிசில் பெற்றுச் செல்லவே வந்தேன். அவ்வாறு எனது பெருமை யை அறிந்து, எனக்குத்தினையளவு பொருள்தரினும் அதனையே பெரிதென எண்ணுவேன்' என்னுங் கருத்தமைந்த,

'குன்றும் மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசல் னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே''

என்றபாடலைப் பாடிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அங்ங னம் சென்றவர், 'வெளிமான்' என்னும் சிற்றரசன், கல்விகேள்விகளிற் சிற ந்தவனாகவும், புலவர் மனம் மகிழும்படி அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பவனாகவும் சிறந்து விளங்குகின்றானென்று கேள்வியுற்று அவனி டம் சென்றார்.

அச்சமயம் நோய்வாய்ப்பட்டிருந்த வெளிமான், புலவரைக் கண்டு அளவுகடந்த மகிழ்ச்சிகொண்டு, 'ஐயனே! எனதுயிர் உடலினுள் இருக்கின் றதோ, அல்லது வெளியிற் சென்றுவிட்டதோ அறியேன். யான் நன்றா யிருக்குங்காலத்து வந்து மனமகிழ்ந்து கொடுக்கப்பெற்றீ ரில்லையே!' என்று வருத்தமுற்றுப் பின் தன்தம்பியாகிய இளவெளிமானைப் பார்த்துப், புலவர் மனமகிழும்படி அவருக்குப் பரிசில் கொடுத்துதவுவாயாக என்றுகூறிவிட்டு இப்பூவுலக வாழ்க்கையை நீத்தான்.



அந்நிலையைக்கண்ட புலவர்மனம் பட்ட துன்பத்திற்கோ ரளவில்லை. பரிசில் பெற்று மணக்கோலமாகச் செல்லவந்த புலவர், பரிசிலற்றுப் பிணக் கோலங்கண்டு நொந்தார். பிறகு ஒருவாறு தேறி, இளவெளிமானிடஞ் சென்று தனது வறுமையையெல்லாங் கூறி அதனைப் போக்கவேண்டினர். உதாரகுணமுள்ள வெளிமானுடன் பிறந்தானாயினும், உலோபகுணம் நீங் கப் பெறாத இளவெளிமான், புலவர் பெருமையை அறியானாய் ஏதோ சிறிது கொடுத்தான். சிங்கம் பசியால் வருந்தினாலும், யானையையே யன் றித் தேரையைப் புசியாதது போல, புலவரும் வறுமையால் வருந்தினரா யினும், தனது அருமையையறிந்து மகிழ்ந்து கொடுக்காத அந்தச் சிறுசோ டையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டு, வெளிமானை நினைந்து இரங்கித் தன்மனத்தைத் தேற்றிக்கொண்டு புறப்பட்டு வெளிப்போந்தார்.

இங்ஙனம் வழிச்செல்லும் புலவரெதிரே, பாணர், கூத்தர் முதலிய புலவர், யானை, குதிரை, குடை, கொடி, முரசுடன் வரக்கண்டு, இத்தகை யசெல்வம் நீவிர் யாண்டுப்பெற்றீர்? என வினவினர். அவர்கள், 'ஐய! முதி ரமலைக்குத் தலைவனாகிய குமணவள்ளல்பாற் சென்றேம். அவன், எங்கட்கு அறுசுவை அடிசில் அன்புடனிட்டு, இச்சுமையையும் எங்கள் மனம் தேக் கிடத் தந்தனன். நீவிரும் அவன்பாற் செல்வீரேல், பிறகு எங்களாற் கூ றொணாது.' என்று தழுதழுத்த உரையாற் கூறினார்கள்.

அவ் வார்த்தையைக் கேட்ட பெருஞ்சித்திரனார், பெரு மகிழ்வுற்றுத் தன் வறுமைநீங்கினார்போல குமணனை யடைந்தார். புலவர்வரவைக்கண்ட குமணன், பெருமகிழ்வுடன் எதிர்சென்று அழைத்துவந்து சிம்மாசனத் திருத்தி வழிவந்த களைப்பாற்றி, நெய்யடிசிலைப் பொற்கலங்களிலிட்டுப் புலவரது காய்ந்த குடல் தழைவுறும்படி உண்பித்தான். பிறகு, புலவ ரது கல்வியின் பெருமையை அவர்பால் உரையாடித் தெளிந்து, மிக மகிழ்வுற்றவனாயும், பிரிய மனமில்லாதவனாயு மிருந்தான். அப்பொழுது புலவர், தனது இல்லின் நிலையை நினைந்து குமணனிடம் கூறுகின்றார்:-- "அரசே! வயது நூறாகியும் எனதுயிர் நீங்கவில்லையே என்று குனிந்து கோலூன்றி, வெள்ளிக்கம்பிபோல விரிந்த தலைமயிருடனே முற்றத்திற் கும் நடக்கமுடியாத எனது தாயும், உப்பும் இன்றி நீரில் குப்பைக் கீரை யை அவித்தருந்திக் கிழிந்த துணியுடுத்து என் வரவு பார்க்கும் மனையா ளும், வற்றிக்கிடக்கும் முலையைச் சுவைத்துப் பாலின்றித் தாயின் முகத் தைப் பார்த்தழும் எனது மகவும், பசியால் வருந்தும் எனது சுற்றமும் மகிழ ஏதாவது பரிசில் கொடுத்தனுப்புதல் வேண்டும்'' என வேண்டினர். தனது தாயையும், மனைவியையும், குழந்தைகளையும்,

"வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல் வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்''

"பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய மார்பன் பெரிதழிந்து

குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்று
அவிழ்ப்பத மறந்த பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யாளும்"

இல்லுணாத் துறத்தலின் இன்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி புரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானு ளாகி நனவின்
அல்ல லுழப்போள்"

எறக் கூறுதல் சிறிது மீகைக் குணமில்லாத உலோபியையும் உருகச்செய்து விடும்.

அதுகேட்ட குமுணன், புலவரைப் பிரிய மனமில்லாதவனாகிலும், அவரது வறுமையை யெண்ணிப் பட்டாடைகளும், பொற்குவியலும், கொம்புபடைத்த களிறொன்றும் கொடுத்தனன். அக் கொடையைக் கொண்ட புலவர் குமுணனைப் பலவாறு வியந்து, யானைமீ திவர்ந்து விடைகொண்டார். அரசனும் எழுடி பின் சென்று விடையீந்து திரும்பினன். யானைமீ தூர்ந்துசெல்லும் புலவர், இளவெளிமானுக்குத் தன் திறனும் கொடையாளிகள் திறனும் குறிப்பித் தறிவுறுத்த வெண்ணி, அவன் காவல்மரத்தில் யானையைக் கட்டிவிட்டு உட்சென்று, இளவெளிமானைக் கண்டு, "அரசே! இரவலரைப் புரக்கும் புரவலன் நீயல்ல. இரவலர்க்குப் புரவல ரில்லாம லில்லை. இரவலனாகிய எனக்குப் புரவலனாகிய குமுணன் தந்த பரிசிலை வந்துகாண். நின் வாயிலினுள்ள காவல்மரமும் வருந்த யாம் பெற்ற களிற்றினைப் பார். யான் சென்றுவருவேன்" என்று கூறிவிட்டு யானைமீதேறித் தன்னூர் வந்து சேர்ந்தார். அதுகண்ட மனைவி மக்கள் மகிழ்ந்தனர். புலவர், மனையாளை நோக்கி, குமுணவள்ளல் கொடுத்த இப் பொருள்களைக்கொண்டு நாம் மாத்திரம் உண்ணலாகாது. நம்போன்றவர் எல்லோரையு முண்பித்து நாமு முண்ணல்வேண்டும்" என்று அறவுரை கூறி, அவ்வாறே செய்து வாழ்ந்து வந்தார்.

---

உ

# திருநெல்வேலி ஜில்லா
# ஸநாதன தர்ம மஹாநாடு.

(முற்றொடர்ச்சி தொகுதி-கக: பக்கம்-41க.)

இனி, அசோகராஜா இப் பாரத பூமியை அரசாண்ட காலத்தில் புத்தமதஸ்தர்கள் இந்தியாவில் அதிகமாக இருந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. மகமதியர்கள் அரசாட்சி செய்த காலத்தில் இஸ்லாம் மதத்தில் அநேகர் சேர்ந்தார்கள் என்பது நமது நேயர்களுக்குத் தெரியாததல்ல. ஆகையால், அந்தந்த அரசாட்சிக்கேற்ப உலகத்தில் அம்மதங்கள் பிரசாரம் செய்யப்பட்டு மதமாறுதல்கள் உலகில் உண்டாகின்றனவேயன்றி, வீணாகத் தீண்டாமையைக் குறைசொல்வது நியாயமில்லை. சங்கரர், ராமாநுஜர், மத்வர் முதலானோர் அவதரித்து பிறமதங்களைக் கண்டித்துப் பிரசாரங்கள் செய்தபோது அந்தந்த மதங்கள் விருத்தியடையாமலிருக்க முடியுமா? கிருஸ்துவ காலேஜ்களில் சேர்ந்தால் மாணவர்களுக்கு பரீக்ஷையில் (fail) தவறுதல் ஏற்படுவது கிடையாது. இவ்வாறான ஆசை வார்த்தையாலும், பணத்தாலும், மதபோதனையாலும், உத்யோக ஆசையாலும், நிர்ப்பந்தத்தாலும், இந்துக்கள் வேறு மதங்களைக் கைக்கொள்ளுகிறார்களே தவிர வேறில்லை. மேற் கூறியபடி தீண்டாதார்கள் இப்போது கிருஸ்துவ மதத்தைத் தவிர, மற்ற இஸ்லாமிய மதம் முதலியவைகளில் சேராதிருப்பது இதற்கு முக்கிய அத்தாக்ஷியாகும். ஆகையால், வீணாகத் தீண்டாமையைப் பழிப்பது தவறு. இனிச் சிலர் 'தீண்டாமையை விலக்குவதாலும், ஆலயப் பிரவேசத்தாலும் ஸ்வராஜ்யம் கிடைத்துவிடும், எல்லோரும் ஏகமனதுடன் அதை அடைய விரும்பவேண்டும். இத்தீண்டாமையால் அவர்கள் நம்முடன் சேர முடியாமலிருக்கிறது' என்கிறார்கள். இதைச்சற்று கவனித்துப்பாருங்கள். இத்தீண்டாமை முதலியன ஆயிரக்கணக்கான வருஷங்கட்கு முன்பே இவ்வுலகில் இருந்திருக்கின்றன வென்பதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. அக்காலத்தில் நமது தேசத்தாரிடமே ராஜ்யமிருந்தது. ஆகையால், நம்தேசத்தாரிடம் இராஜ்யமிருப்பதற்கு இத்தீண்டாமை முதலியன இடையூறாக அப்பொழுது இருக்கவில்லை என்று நன்கு விளங்குகிறதல்லவா? சுமார் 250 வருஷங்களாக அந்நிய நாட்டார்கள், நம்மை ஆண்டு வருகிறார்கள். அவர்களுக்குள்ளும் ஜாதி பேதமும், மத பேதமும், லிபரல் கன்ஸர்வேட்டிவ் என்று இவ்வாறு பலவேற்றுமைகள் இருப்பதை நாம் நேரில் அநுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

அவர்களிடத்தில் இருக்கும் இவ்வேற்றுமை நமது ராஜ்யத்தை ஆளுவதற்கு இடையூறாகவிருக்கிறதா? முற்காலத்தில் நம் தேசத்

தரசர்கள் வர்ணாச்ரம ஆசாரங்களை நன்றாகப்பரிபாலித்து உலகத்தில் க்ஷேமத்தைத் தந்திருக்கிறார்கள். இதுபற்றியே இப்பொழுதும் நாடகமேடைகளில் ராஜதர்பார் என்றால், வர்ணவியவஸ்தைகள் சரியாக நடந்து வருகிறதா என்று அரசர்கள் வினவுவதாக நடிக்கப்படுகிறது. ஒரு ஜாதியினர் செய்வதை இன்னொரு ஜாதியினர் செய்தால் தேசத்திற்கு ஆபத்துக்கள் உண்டாகுமென்பது ஸ்ரீராமாயண உத்ரகாண்டம் ஜம்புகன் கதையால் நன்கு விளங்கும். ஜாதிதர்மங்களை ஒழித்தால் ஸ்வராஜ்யம் கிடைக்குமென்பதற்கு ஒருவராலும் உறுதிகூற முடியாது. ஆனால், தேசத்தில் ஒற்றுமை வேண்டுவது அவசியமே. அதற்கு இத்தீண்டாமை இடையூறில்லை. ஏனைய ஜாதியோரிடத்தில், ஜஸ்டிஸ், சுயமரியாதை, N. B. சுயேச்சை, ஸ்மார்த்த, வைஷ்ணவ தெற்கத்தியர், வடக்கத்தியர், மதராஸி, பம்பாய்வாஸி, என்று அநேக வேறுபாடுகள் இருக்கின்றனவே. அவற்றிற்கும் இத்தீண்டாமை முதலியனவா காரணம்? ஒருஜாதியில் அதிலும் ஒருகுடும்பத்தில் பிறந்தவர்கள் சண்டையிட்டுக் கொண்டு பாரதயுத்தத்தில் எண்ணிறந்தவர்கள் மடியவில்லையா? ஸ்ரீராமாயணயுத்தத்தில் குரங்குகளும், மனிதர்களும், ராக்ஷஸனாகிய விபீஷணனும், கரடி, பக்ஷி முதலியவைகளும் ஒற்றுமையுடன் சண்டை செய்து, எதிரியை ஜயிக்கவில்லையா?

“முன்பின் தெரியாத என்னை அந்தப்புர மஹிஷியான உம்மிடம் அனுப்பும்படியான சிநேகம் குரங்குக்கும் ராமனுக்கும் உண்டாச்சுது.” என்று அனுமான் சொல்லுவதாக சுந்தரகாண்டத்தில் வால்மீகி என்பவர் ஆச்சரியப்படுகிறார். ஆனால், அவர்களின் சாதி ஒன்றில்லை என்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஒரே சரீரத்தில் பிறந்தவிரல்கள் ஐந்தும் ஐந்துவிதமாக இருப்பதையும், அவைகள் ஒன்றுகூடி சில காரியங்களையும், தனித்தனியாக சில காரியங்களையும் செய்வதை நாம் பார்க்கவில்லையா? அதுபோல வெவ்வேறு ஜாதியினர் அவரவர்கள் ஜாதிமுறைப்படி நடந்து சமூகத்தில் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டியது இந்துக்களின் கடமை. இந்துலாப்படி மதப் பாதுகாப்புக்கு இடமும், ஜாதிபேதத்துடனும் இருந்தால்தான் அவர்கள் இந்துக்களாவார்கள். மேலும், ஒரு தாய் வயிற்றில் எல்லோரும் பிறந்தவர்கள் என்பது தவறு. ‘சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்” என்ற கீதையின்படி ஈச்வரனது சங்கற்பத்தால் எல்லோரும் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். ஆகையால், ஒரு வயிற்றில் பிறந்தவர்களுக்குள் ஜாதிபேதம் இருக்கக் காரணமில்லை என்பது பொருந்தாது. மனிதன் விலங்கு எல்லாம் ஒரு ஜாதியாக ஒப்புக்கொள்ளுகிறார்களா? எல்லாவற்றிற்கும் மன ஒற்றுமையே வேண்டும். இப்பொழுது இயற்றப்படவிருக்கும் சட்டங்களால் சமூகத்தில் அதிகப் பிளவும் வேற்றுமைகளும் ஏற்படும். இத்தீண்டாமை முதலியன பக்ஷபாதமற்ற தெய்வத்தின் சம்மதமாக



மாட்டாது என்கிறார்கள். இவ்வுலகத்தில் சிலர் புத்திநுட்பமுடையவர்களாகவும், சிலர் நற்குண நல்லொழுக்கமுடையவர்களாகவும், சிலர் அழகுடையவர்களாகவும், தனிகர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களைக் கண்டால் அநேகமாக ஜனங்கள் அவர்களிடம் அன்பு பாராட்டி ஆதரிப்பதையும், அவர்களே புத்திநுட்பமில்லாதவர்களையும், குரூபிகளையும் கண்டால் பேசாமல் ஒதுங்கிவிடுகின்றனர் என்பதையும் நாம் நேரில் பார்க்கிறோம். ஆனால், ஜனங்களுக்கு இப்படி அருவருக்கத்தக்க குரூபிகள், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, தீரா வியாதியன், தரித்திரன் இவர்களைப் பக்ஷபாதமற்ற தெய்வம் ஏன் உண்டுபண்ணவேண்டுமென்றால், இது தெய்வ பக்ஷபாதமல்ல. அவரவர் செய்த புண்ணிய பாவங்களின் பலன்கள் என்று சொல்வதைத் தவிர வேறு சமாதானங்களில்லை. அப்படிக் கஷ்டப்படுபவர்கள் தனது தப்புக்களை உணர்ந்து அடுத்த ஜன்மத்தில் மேற்பதவிக்கு வருவார்கள். மற்றவர்கள், “நாமும் தப்புச் செய்தால் இவர்களைப்போல் அநேக துன்பங்களை அனுபவிக்க வேண்டிவருமென்று பயந்து தப்புச்செய்ய மாட்டார்கள். ஆகையால், தீண்டா ஜாதியாரைக் கெடுப்பதற்காகவும், உலக மரியாதையைக் குலைப்பதற்காகவும் இச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தப்புச் செய்தவர்களைத் தண்டனையில்லாமல் செய்துவிடவேண்டும் என்பதுபோல இது இருக்கிறது. இவற்றைக் கீதையில், “யோபிஸ்யு பாபயோநய: க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநா சுரீஷ்வேவ யோநிஷு” என்ற சுலோகங்களால் பகவானே வெளியிட்டிருக்கிறார். தாழ்ந்த வகுப்பினர்கள் அவரவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் முறை வழுவாமல் நல்லொழுக்கத்துடன் இருப்பார்களாகில் மறுஜென்மத்தில் உயர்ந்தவர்களாகி நற்கதியையும் அடைகின்றனர். அப்படியே மேல் ஜாதியினர் தவறிநடந்தால் மறுஜென்மத்தில் தாழ்ந்துவிடுகிறார்கள் என்பது இந்துமதத்தின் உண்மை.

இனி, தயவைப் பற்றி விசாரிப்போம். தயவு என்றால் ஒரே ஜாதியாய்விடுவதென்பதல்ல. ஒருவன் குற்றம் செய்தாலும் அதைப்பொறுத்து, அவனிடத்தில் இரங்கிக் காப்பாற்றுவதே தயவெனப்படும். இத் தயவு நம் முன்னோர்களைவிட இப்பொழுது இருக்கும் வேஷதாரிகளுக்கு அதிகமில்லை. இவர்கள் ஒருவரையும் தாழ்வாக நடத்தக்கூடாதென்று வாயால் சொல்லுகிறார்கள். வீட்டில் இருபது வேலையாட்கள் இவர்களுக்குப் பணிவிடைசெய்ய வேண்டியிருக்கிறது. நம் முன்னோர்கள், தாழ்ந்தவர்கள் தப்புச்செய்தால் தண்டனையைக் குறைத்தும், உயர்வகுப்பினருக்குத் தண்டனை அதிகமாகவும் விதித்திருக்கிறார்கள். இதற்குப் பல பிரமாணங்களைச் சாஸ்திரங்களில் காணலாம். இக்காலத்திலும் அநேகர் தாழ்ந்த வகுப்பினர்களுக்கு அவ்வவ் விசேஷங்களில் தான்யம் முதலியன கொடுத்தும் மானியங்கள் விட்டிருப்பவையும் நேரில் பார்க்கிறோம். இதுபற்றியே

சிலருக்குக் குடிமக்கள் என்றபெயரும் வழங்கப்பட்டுவருகிறது. இத்தீண்டாமை உயர்வகுப்பினரிடத்தும் இருக்கிறது. மாதவிடாயான ஸ்திரீகளிடத்தில் இத்தீண்டாமை இப்பொழுதும் எல்லோராலும் நடத்தப்பட்டுவருகிறது. அவர்களிடத்தில் ஜனங்களுக்குத் தயவில்லை என்று சொல்லமுடியுமா? பிரசவித்தவள், பிறப்பு இறப்புத் தீட்டுள்ளவர்கள், ஸ்நானம் செய்யாதவர்கள், இவை முதலான பல காரணங்களால் அக் காலங்களில் அவர்கள் தீண்டாதார்களாகப் பாவிக்கப்பட்டு வருவதை, தயவின்மையால் என்று எவராலும் சொல்லமுடியுமா? பெரிய மஹாராஜா ராணிகளிடத்துங்கூட மேற்கூறிய காரணங்களால் இத்தீண்டாமை இருந்துவருகிறது. ஆகையால், இந்துமதப்படியும், சாஸ்திரப்படியும் நடந்துவருவதில் உயர்வு தாழ்வு என்று சொல்வது கூடாது. எல்லோரும் மேற்கூறிய காலங்களில் ஹரிஜனங்கள் என்று அழைக்கப்பட வேண்டுமா? இனி பூசைசெய்பவரைத் தவிர கோவில்களில் எவரும் தெய்வத்தைத் தொடக்கூடாதென்று இருக்கிறது. அவ்வவ்விடங்களில் ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டுடனேயே இருந்துவருகிறார்கள். மலையாள தேசத்தில் கற்பக்கிரகத்திற்கு வெகு தூரத்திலேயே எல்லோரும் நின்றுவிடுகிறார்கள். ஒற்றைக்கல்மேல் ஒருவரும் ஏறக்கூடாதென்று விலக்கிவிடுகிறார்கள். இவைகள் இதுவரை நடந்துவருகின்றன. பிராம்மணர்களும் அந்தவிடத்தில் அதற்குமேல் போவதில்லை. ஆதலால் அவர்களும் தீண்டாதார்களா? யாரைத்தொட்டாலும் போத்திமார்கள் ஸ்நானம் செய்யவேண்டியிருக்கிறது. இவைகளெல்லாம் சாஸ்திரங்களையும், ஆசாரங்களையும், பின்பற்றி வந்தவை என்பதை அறிந்துகொள்ள வேண்டும்

## ஜாதி பிறவியினால் ஏற்படக்கூடியதே.

இச் சாதிபேதம் பிறப்பினால் ஏற்பட்டது. ஒருவன் எத்தனை ஒழுக்கத்துடனிருந்தாலும், வேறு ஜாதிக்குரிய ஆசாரமும், வேறு ஜாதியும் வந்துவிடமாட்டாது. ஜாதிபேதம் பூர்வஜென்மத்தில் செய்த புண்ணிய பாபங்களின் காரணமாய் வந்ததே. ஆண், பெண் என்ற பேதம்போலவே ஜாதிபேதமும். மேன்மக்கள் கெட்டாலும் பிறப்புரிமை போகாது. "கெட்டாலும், மேன்மக்கள் மேன்மக்களேசங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்றார் ஔவையார். கீதையிலும் 'பாபயோநய:' என்று தாழ்வகுப்பினர் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாதுர்வர்ண்யம் என்ற கீதையும் பிறப்புரிமையைத்தான் சொல்லுகிறது. குழந்தைகளுக்கு அந்தந்தஜாதிக்கேற்றவாறு ஏழாவது வயது முதல் உபனயனம் முதலிய காரியங்கள் செய்கிறார்கள். அச் சிறுகுழந்தைகளுக்குச் சௌளம் உபநயனம் செய்வதற்குமுன் ஏதாவது அறிவு நல்லொழுக்கம் இருக்கமுடியுமா? அதுபற்றி அக்குழந்தைகளின் ஜாதியை நிர்ணயிக்கமு



டியுமா? ஆகையால், பிறப்புரிமையைக் கொண்டுதான் அந்தந்த பிறவிக்கேற்ப அநேக ஜாதிப்பாகுபாடுகள் ஏற்பட்டு வருகின்றன என்பதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அவனவனுடைய குணவொழுக்கங்களால் ஜாதி ஏற்பட்டதாகச் சொல்வது பொருந்தாததே. மஹாபாரதம் முதலியவற்றில் ஜாதி பிறவியினாலேயே என்று நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கருடபுராணத்தில் கருடன் மிலேச்சர்களைச் சங்காரம் செய்யும்பொழுது, அம் மிலேச்சர்களுடன் வெகுநாளாகத் திரிந்துகெட்ட பிராம்மணன் ஒருவனைப் பிறப்பின் மகிமையால் விழுங்கமுடியாமல் விட்டுவிட்டதாக இருக்கிறது. சுமார் ஆயிர வருஷங்களுக்கு முன் இருந்த மாகர் என்ற கவி ஐந்தாவது சர்க்கக் கடைசியில் ஜாதி பிறப்புரிமை என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகையால் ஒரே ஜன்மத்தில் ஜாதிமாறுமென்பது சாஸ்திரங்களின் ஸித்தாந்தமும், அநுபவமுமாம். சாஸ்திரங்களின் உண்மையைப் பூராவாக அறிந்துகொள்ளவும், காலத்திற்கேற்ப சாஸ்திரங்களை மாற்றவும் நமக்கு ஆற்றல் கிடையாது.

தஸ்மாத்ருஷயோவரேஷு நஜாயந்தே.

என்று ஆபஸ்தம்ப ரிஷி, ஆர்ஷப்ரக்ஞை உலகத்தில் இனிக்கிடையாதென்றும், இதுவரையிலுள்ள மரியாதையின்படியே எல்லோரும் நடக்கவேண்டும் என்றும் தனது தர்மஸூத்திரத்தில் சொல்லியிருக்கிறார். அவர் காலத்தோடு சாஸ்திர உண்மையைப் பூராவாகத் தெரிந்தவர்கள் நின்றுவிட்டார்கள். இப்பொழுது அதைப்பற்றி நினைப்பதற்கே நம் போன்றவர்களுக்கு அதிகாரமில்லை. இப்பொழுது இருக்கும் பஞ்சமர்கள் தீண்டாதார்களல்ல என்றும், சாஸ்திரங்களில் சொல்லப்படுகிற சண்டாளர்கள் இவர்களல்ல என்றும் சிலர் வாதிக்கின்றனர். ஆனால், சண்டாளர்களுக்குச் சாஸ்திரத்தில் சொல்லிய விதிப்படி நாளிதுவரை பஞ்சமர்கள் நடந்து வருகிறார்கள். பஞ்சமர்கள் தவிர ஏனையோர்களும் அப்பஞ்சமர்களைச் சண்டாளர்களாகப் பாவித்து வருவதைக் காந்திஜீமுதலியவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்விதப் பாகுபாடு ஆரம்பித்தகாலம் ஒருவராலும் நிச்சயிக்கப்படவில்லை. மற்றஜாதியார்களையும், அதாவது வண்ணான், நாவிதன், முகம்மதியன், கிருஸ்தவன், செம்படவன் முதலியவர்களை உலக வழக்கத்தைக்கொண்டே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அதுபோலவே பஞ்சமர்களும் சண்டாளர்களாகப் பாவிக்கப்பட்டுவருகிறார்கள். அவர்களும் இதை ஒப்புக்கொண்டு நாளிதுவரை நடந்துவருகிறார்கள். உலகில் ஒவ்வொரு வஸ்துவையும் உலக வழக்கத்திலுள்ள பெயரைக்கொண்டுதான் நிச்சயிக்கிறோம். இதற்குக்காரணம் கேட்பது 'நீ மனிதன் என்பதற்கு என்ன அடையாளம்?' என்பதுபோல் இருக்கிறது.

௨.

# சமயவாழ்க்கையும் தமிழர் நாகரீகமும்.

திருப்பாதிரிப்புலியூரில் ஞானியார் மடாலயத்தில் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அறுபதாண்டு நிறைவு விழாவில் தர்மஸ்தாபன போர்டு கமிஷ்னர் ஸ்ரீமான் T. K. சிதம்பரநாத முதலியார் பி.ஏ.-பி.எல், சமய வாழ்க்கை என்பது பற்றிப் பேசியதன் சுருக்கம்:—

மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது சமயம் என்று எவரேனும் இயம்பினால் அது சரிதான் என முன்னாளில் இருந்தவர்கள் ஒப்புக்கொள்வது வழக்கம். இப்போதிருக்கிறவர்கள் ஏன் சமயம் வேண்டும் எனக் கடாவுகின்றனர். சமயப் பற்றுடையவர்கள் இந்தக் கேள்வியைப் பற்றி அஞ்ச வேண்டுவதில்லை. ஏன் என்ற கேள்வி பிறந்தால்தான் உண்மை வெளிப்படும். ஏன் பழம் கீழே விழுந்தது என்றகேள்வியை எழுப்பினதால் தான் உலகம் புகழும் சயன்சு அதாவது ஜடதத்துவ சாஸ்திரத்தை நியுட்டன் கண்டுபிடிக்கலானார். சயன்சு சாஸ்திரம் எங்கும் பரவியுள்ள இந்நாளில் ஏன் என்ற கேள்வி பிறத்தல் இயற்கையே. தத்துவ ஆராய்ச்சியாம் அக்னிச் சோதனைக்கு இந்து மதம் உட்படுத்தப் பெற்று வெற்றியுடன் வெளிவந்துளது. சயன்ஸ் ஆராய்ச்சியில் அணுக்கள் பரமாணுக்கள் எனப் பல்வேறு பொருள்கள் உண்டென்றும் இந்த அணுக்கள் ஒவ்வொன்றிலும் ஜீவசக்தி இருக்கிறதென்றும் மேல் தேச சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த உண்மையை ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னரே இந்துக்கள் கண்டிருக்கின்றனர். சாணிலும் சதகூறிட்ட கோணிலும் ஈசனுளன் எனக் கம்பர் கூறியது தற்கால சாஸ்திரத்தை ஒட்டியிருக்கிறது. சொல்லினும் சொல்லின் முடிவினும் ஈசன் உளன் என அவர்கூறியிருத்தலால் தற்கால சாஸ்திரத்தையும் ஒருபடி தாண்டியிருக்கிறார். எல்லாம் அவன்செயல் என்பதை நக்கீரர் யானொன்றும் தானொன்றும் இரண்டில்லை என்பதால் விளக்குகிறார். காரைக்காலம்மையார் இந்தக் கருத்தை அற்புதத் திருவந்தாதியில், ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன் என்ற பாசுரத்தால் வலியுறுத்துகின்றார். எனவே தற்காலப்புதுமையான மேல்நாட்டு ஆராய்ச்சியில் ஏற்படும் உண்மைகள் இந்து சமய நூல்களில் மலிந்து கிடக்கின்றன. மூர்த்தி வழிபாடு விஷயம் சயன்சினால் தெளிவுபட இயலாது. அனுபவத்தால் அறியவேண்டுவது. குழந்தை ஒன்றால் கழியை வைத்துக்கொண்டு தன் குழந்தை என்ற பாவனையுடன் அதனை முழுக்காட்டுவதும் அதற்குப் பொட்டு வைப்பதுமாக இருக்கிறது. இதனைப் பைத்தியம் எனச் சிலர் சொல்வர். இல்லை இல்லை. இதுதான் பாவனை. உண்மையான பாவனை பலன் கொடுப்பது வெகு எளிது. திருவண்ணாமலையைப்பற்றிச் சொல்லுகையில் கண்டங் கரிய மலை, கண்மூன்றுடைய மலை, அண்டர்களுக்கு அரிய மலை, தொண்டர் முன் தோன்றும் மலை எனப்படுவதால் உண்மைப் பாவனை உடையவர்களுக்கு அருள் எவ்வளவு எளிது என்பது புலப்படுகின்றது. வாழ்க்கையில் காணப்படும் ஒவ்வொன்றையும் கடவுள் திருமேனியாகவும் கடவுள் அருளாகவும் கொள்வோர் உலகத்திற்குச் செய்யும் உபகாரம் மிக அதிகமாகும்.



## தமிழர் நாகரீகம்.

ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ.-எம்.எல். தமிழர் நாகரீகம் என்பதுபற்றிப் பேசியதன் சாரம்:—

முன்னாளில் தமிழர் புற அறிவு அதாவது வெளி உலக ஆராய்ச்சியிலும், அக அறிவு (உள் உலக) ஆராய்ச்சியிலும் பண்பட்டிருந்தனர். அவர்கள் ஆகாய விமானம் செய்து உபயோகித்தனர். தூரத்தில் நடக்கும் விஷயங்களைக் காணவும் தூரத்தில் உள்ளவர்களிடம் பேசவும் சாதனங்களை அமைத்துக்கொண்டனர். அக ஆராய்ச்சியால் கடவுள் இன்பத்தை அவர்கள் நுகரநுகர அக ஆராய்ச்சியிலேயே அவர்களின் கவனம் செல்வதாயிற்று. புற ஆராய்ச்சியில் ஏற்பட்ட அனுபவத்தையும் விமானம் தூரதர்சனி இவைகளை அமைக்கும் மாதிரியையும் அவர்கள் நூல்வடிவில் எழுதிவைக்கவில்லை. பூதங்களின் மாறுபட்ட அமைப்புகளால் இயங்கும் விமானங்களை அவர்கள் கைவிட்டு அகத்துறையில் அவர்களுக்கு ஏற்பட்ட அளவற்ற சக்தியால் அதாவது மனோசக்தியாலும் யோக வலிமையாலும் தாங்கள் விரும்பியவற்றை அதாவது ஆகாயத்தில் பறத்தல் முதலியவற்றை முடித்துக்கொண்டனர். புற ஆராய்ச்சி மெல்ல மெல்லக் குறைந்து சூனிய நிலைக்கு வந்தது. அக ஆராய்ச்சியும் பாழ்பட்டுப் போய்விட்டதால் இரண்டையும் இழந்த நிலைமைக்கு இந்துக்கள் வந்துவிட்டனர். எனவே, அகப்பொருளை நம்பிப் புறப்பொருளை இழந்த நாம் இப்போது இரண்டையும் தோற்று எல்லாவற்றிற்கும் மேற்குத் தேசத்தாரை எதிர்நோக்கி யிருக்கிறோம். அக அறிவு முற்றிலும் போய்விடவில்லை. ஆகலால் அக அறிவையும் அதன்வழி புற அறிவையும் வளர்ப்போமாக! ஆனால், புறஅறிவால் மாத்திரம் மனிதன் உய்யமுடியுமா? பூதங்களை அடக்கி ஆளுவதால் மட்டும் அடையும்பயன் என்ன? அக உணர்ச்சியின் உயர்ந்த நிலையும் விரிந்த பண்பும் புற உணர்ச்சியால் உண்டாகா. பூதங்களுக்கு எல்லை உண்டு. அகஉணர்ச்சிக்கு எல்லையே இல்லை. கடவுளை ஐயறிவால் காணமுடியாது. ஞானக்கண்ணால் தான் காணமுடியும். பிற பொருள்களில் வைக்கும் அன்பைக் கடவுள்மேல் வைக்கவேண்டும். கடவுளைக் கள்வன் எனவும் காதலன் எனவும் சொல்லுதல் தமிழர்மரபு. இதுவே அக வுணர்ச்சியின் தத்துவம்.

பூமி சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனல் உண்டை. முதலில் வாயுவாகிக் காற்றாக மாறித் தீயாகப் பரிணமித்து நீராகிப் பின் பூமியாக உருப் பெற்றது. இந்தப் பூமி குளிர்ச்சியடைய வெகுகாலம் சென்றது. குளிர்ச்சியடைந்த பின்னர் முதலிற் கடற் பிராணிகளும் பின்னர் மனிதர்களும் தோன்றினர். இது ஐரோப்பிய சயன்சின் கூற்றாகும். இக்கூற்று தமிழ்நூல் பரிபாடலில் காணப்படுகின்றது. வாயுவாக இருந்து கடல் நிலம் தோன்றி உயிர் தோன்றின எனப் பரிபாடல் கூறுகின்றது. மச்சம், வராகம், கூர்மம், சிம்மம், வாமனம், ராம பலராம கிருஷ்ணன் என்ற மகாவிஷ்ணுவின் அவதார வரிசையும் மனித உற்பத்தியின் வரிசையை விளக்குவதாக இருக்கின்றது. முதன்முதல் தென்னாட்டில்தான் மனிதர் தோன்றினர். அவர்கள் நீக்ரோவராவர். அவர்கள் ஆப்பிரிக்கா சென்றுவிட்டனர். அவர்களுக்குப் பின்னர் தோன்றினவர் மங்கோலியர் என்று சொல்லப்பெறுவர். அவர்களுக்குப் பின்னர் தோன்றியவர் காகேசியர் ஆவர். இவர்கள் தாம் தமிழர் என்பர்.

உ

# ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். டி. முத்துசாமி ஐயர்.

['ராய்ஸ் வீக்லி' என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார்.]

## II

முத்துசுவாமி ஐயர் ஒரு ரயில்வே சம்பவத்திலும் சம்பந்தப்பட்டிருந்தார். அக்காலத்தில் இவ்வித சம்பவங்கள் அதிகமாக இருந்தன. இப்பொழுதும் அப்படியே நடப்பது எனக்குப் பரம திருப்தியாக இருக்கும்.

கோடைகாலம்: இன்னும் மூன்று ஐரோப்பிய சகாக்களுடன் சர். டி. முத்துசுவாமி ஐயர் உதகமண்டலம் சென்றுகொண்டிருந்தார். ரயில் சென்னையை விட்டு சாயங்காலம் புறப்பட்டு மறுநாள் மத்தியானம் உதகமண்டலம் போய்ச் சேருகிறது.

சர். டி. முத்துசுவாமி ஐயர் ஒரு முதல்வகுப்பு வண்டியில் தூங்கிக்கொண்டிருந்தார். நள்ளிரவில் அவர் எழுப்பப்பட்டார். மனைவியுடன் பிரயாணஞ் செய்யும் ஒரு ஐரோப்பியக் கனவானுக்காக இந்த வண்டி ரிசர்வ் செய்யப்பட்டிருப்பதால் இதை விட்டுவிட்டு வேறு வண்டிக்கு நீங்கள் போகவேண்டும் என்று கட்டளை கிடைத்தது.

அவர் வயதேறியவராகவும், களைப்புற்றவராகவும் இருந்தாலும், சண்டைபோடும் குணத்தைக் காட்டிக் கொள்ளாததாலும், ஆங்கிலோ இந்திய ஸ்டேஷன் மாஸ்டருடைய தொனி கடுமையாக இருந்தது.

"சீக்கிரம்; வண்டியைத் தாமதப்படுத்த முடியாது. ஐரோப்பிய கனவான் காத்திருக்கிறார்" என்று சர். டி. முத்துசுவாமி ஐயரிடம் சொல்லிவிட்டு ஐரோப்பிய கனவானைப் பார்த்து, "நீங்கள் இந்த வண்டியில் ஏறிக்கொள்ளலாம். சாமான்களை நொடியில் கொண்டுவரச் சொல்லுகிறேன்" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"அவர் முதலில் வெளியே வரட்டும்." என்று இறுமாப்பாக அந்த ஐரோப்பிய கனவான் சொல்லிவிட்டுப் பிளாட்பாரத்தில் நிற்க வேண்டிய அசௌகரியத்தைத் தமது மனைவிக்கு ஏற்படுத்திவிட்டதற்காக ஸ்டேஷன் மாஸ்டரைக் கடிந்துகொண்டார்.

சர். டி. முத்துசுவாமி ஐயர் வெளியேற்றப்பட்டு விட்டார். தமது சகாக்கள் இருக்கும் வண்டியில் ஏறி அவர்களுக்கு அசௌகரியத்தை உண்டுபண்ண அவர் விரும்பவில்லை. வேறு முதல் வகுப்பு வண்டியு மில்லை. ஆகையால் ஒன்றும் சொல்லாமல் 2-வது வகுப்பு வண்டியில் ஏறிக்கொள்ளப்போனார்.



"முதல் வகுப்பில் இடம் இருக்கையில் 2-வது வகுப்பில் பிரயாணஞ் செய்தால் கட்டணத்திலுள்ள வித்தியாசத்தை ரயில்வேக் கம்பெனியார் திருப்பிக்கொடுக்க மாட்டார்கள்" என்று ஸ்டேஷன் மாஸ்டர் சட்டம் பேசினார். கட்டணத்திலுள்ள வித்தியாசத்தைக் கேட்கும் உத்தேசமில்லையென்றும், முதல்வகுப்புப் பிரயாணிகளுக்கு அசௌகரியத்தை விளைவிப்பதைக் காட்டிலும், 2-வது வகுப்பில் பிரயாணஞ் செய்வதாகவும் அவர் சொல்லிவிட்டார். இருந்தாலும் "முதல் வகுப்புப் பிரயாணிகளை இராத்திரியில் எழுப்பக் கூடாதென்று ஒரு விதியிருக்கிறதுபோ லிருக்கிறதே" என்று இடித்துக் காட்டுவதுபோல் அவர் ஞாபகப்படுத்தினார்.

ஆனால், ஸ்டேஷன் மாஸ்டர் இதற்குப் பதில் சொல்லுவதற்கு முன்பே மனைவியுடன் வண்டியில் ஏறியிருந்த ஐரோப்பியர், "அந்த விதி ஐரோப்பியர்களுக்காகத்தான். இந்தியர்களுக்காக இல்லை" என்று சொல்லிவிட்டார்.

"ஓகோ அப்படியா? முதல்வகுப்பி லிருக்கிறவர்க ளெல்லோரும் ஐரோப்பியர்க ளாதலால் நான் இரண்டாவது வகுப்பிற்குப் போய்விடுவதுதான் சரி" என்று சர். டி. முத்துசுவாமி ஐயர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். இந்தத் தகராறும் தீர்ந்தது. ரயிலும் புறப்பட்டுவிட்டது.

அடுத்தநாள் காலையில் ரயில் போத்தனூர் வந்து சேர்ந்தது. பிரயாணிகள் காலை ஆகாரத்தை உட்கொள்ளுவதற்காக ரயில் அங்கு அதிகநேரம் தாமதிப்பது வழக்கம். அந்தக் காலத்தில் ரெஸ்டாரண்ட் கார்கள் இல்லை.

இன்னொரு வண்டியிலிருந்த மூன்று ஐரோப்பிய ஜட்ஜுகளும் இறங்கி தங்களுடைய சகாவுக்காக முதல் வகுப்பு வண்டிகளைத் தேடி வந்தார்கள்.

'இந்த வண்டியில்தானே இருந்தார். எங்கே போய்விட்டாரோ தெரியவில்லையே" என்றார் ஒருவர். "குட்மார்னிங் சார்" என்று சொல்லிக்கொண்டே அந்த வண்டியிலிருந்த ஐரோப்பிய கனவான் வேகமாக அதைவிட்டிறங்கினார். இராத்திரியில் சர். டி. முத்துசுவாமி ஐயரைத் தூக்கத்திலிருந்து மரியாதைக் குறைவான முறையில் எழுப்பிவித்து வெளியே அனுப்புவித்த அவர், ஒரு ஜில்லா ஜட்ஜி. அவரும் மனைவியுடன் உதகமண்டலம் சென்றுகொண்டிருந்தார்.

"குட்மார்னிங் மிஸ்டர்........உங்களுக்குத் தொந்தரவு விளைவித்துவிட்டதற்கு வருந்துகிறேன். இந்த வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த சர். டி. முத்துசுவாமியைத் தேடிவந்தேன்" என்று ஹைகோர்ட்டு ஜட்ஜு பதிலளித்தார். "சர். முத்துசுவா

மியா!" என்றார் டிஸ்டிரிக்ட் ஜட்ஜு. அப்படியே அவர் இடிந்து போய்விட்டார். ராத்திரியில் நடந்த சம்பவங்களை விவரித்து சர். டி. முத்துசுவாமி ஐயர் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னார். "என்ன அசட்டுக் காரியம் செய்துவிட்டீர்!" என்று அந்த ஐரோப்பிய ஐக்கோர்ட்டு ஜட்ஜு சொல்லிக்கொண்டே நால்வருமாக சர். டி. முத்துசுவாமியைத் தேடிக்கொண்டு இரண்டாவது வகுப்பு வண்டிக்குச் சென்றார்கள்.

அங்கு நால்வரிடையே ஒரு சகோதரப் பிரயாணியின் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு சர். டி. முத்துசுவாமி ஐயர் சீராட்டிக்கொண்டிருந்ததை மூன்று ஜட்ஜுகளும் கண்டார்கள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் சிறிது தூரத்திலேயே நின்று கொண்டிருந்தார். அவர்களில் ஒருவர் "குட்மார்னிங்' என்று சொன்னதும், சர். டி. முத்துசுவாமி ஐயர் கையிலிருந்த குழந்தையுடன் வெளியே வந்தார். தாம் அந்த வண்டிக்கு வர நேர்ந்த காரணத்தைப்பற்றி அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. கடைசியாக அவருடைய சகா ஒருவர் 'இராத்திரி உங்களுக்குத் தொந்தரவை விளைவித்துவிட்டதற்காக இடிந்துபோய் இதோ ஒரு அசடு நிற்கிறது. அவர் ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர்........" என்று சொன்னார்.

முதல்நாள் இராத்திரி பழமையைக் காட்டிய அந்த மனிதர் இப்பொழுது வேஷ்டியும் ஷர்ட்டு மணிந்திருந்த மனிதரை நோக்கி நடுங்கிக்கொண்டு வந்தார். அவர் தலை கிறுகிறுத்து விட்டது. குட்மார்னிங் என்று சர். டி. முத்துசுவாமி ஐயர் சொல்லியதுதான் அவர் காதில் விழுந்தது. அவருடன் கை குலுக்கியதுகூடத் தெரியாதபடி அவருடைய மூளை குழம்பிப்போயிருந்தது. வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது. இது ரயில்வே சம்பவந்தான். நாம் எல்லோரும் அநுபவிக்க வேண்டியதுதான். இதை மறந்துவிடுங்கள் என்று சர். டி. முத்துசுவாமி ஐயர் சொல்லிவிட்டு சிரித்துக் கொண்டே "நேற்று ஸ்டேஷன் மாஸ்டருக்கு அநுகூலமாக ரயில்வே விதிக்கு வியாக்கியானம் செய்ததுபோல் நீதிஸ்தலத்தில் இருந்துகொண்டு சட்டத்திற்கும் அர்த்தம் செய்து விடாதீர்கள்" என்று சொன்னார்.

அது என்ன? என்று சகாக்கள் கேட்டார்கள். அது எனக்கும் அவருக்கும் மட்டில் தெரிந்த ரகசியமாக இருக்கட்டும். இனி அவ்விதம் அவர் அர்த்தம் செய்ய மாட்டார் என்று சர். டி. முத்துசுவாமி ஐயர் சொல்லி, 'நான் சொல்லுவது சரிதானே?' யென்று ஜில்லா ஜட்ஜை கேட்டார். அந்த ஜில்லா ஜட்ஜ் குன்றிப்போய்த் தலை வணங்கினார். இதனுடன் இது முடிந்தது.

சர். டி. முத்துசுவாமியாக இருந்ததால்தான் இத்துடன் போச்சு. இல்லையேல் இது கடுமையாகப் போயிருக்கும் என்று ஒரு



ஐகோர்ட்டு ஜட்ஜ் சொன்னார். இப்பொழுதும் இது ஒரு பெரிய பிசகுதான். இத்தகையவர்களால்தான் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அபக்கியாதி ஏற்படுகிறது என்று சீப் ஜஸ்டிஸ் சொல்லி, அவர் குறிப்பிட்ட விதி வியாக்கியானம் என்னவென்று வினவினார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அதன் விவரத்தைச் சொன்னார். "மோசம்; பெருமோசம். மன்னிக்கத் தகாதது. கடுமையான சிக்ஷை கிடைக்கு முன் ராஜிநாமாச் செய்துவிடுங்கள்" என்று சீப் ஜஸ்டிஸ் எச்சரிக்கை செய்தார்.

"வேண்டாம் வேண்டாம். நேற்று நடந்ததற்காக மிஸ்டர்..... மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டால் என் மனதுக்கு அதிகக் கஷ்டமாக இருக்கும். பிரிட்டிஷ் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக இன்னொரு சந்தர்ப்பம்வரை பொறுத்திருங்கள். என் மத உணர்ச்சியைப் புண்படுத்தவேண்டாம். நான் விளையாட்டாகச் சொல்லவில்லை" என்று சர். டி. முத்துசுவாமி ஐயர் வேண்டிக்கொண்டார். சரி என்று அதை சீப் ஜஸ்டிஸ் ஏற்றுக்கொண்டார். "என்னுடைய தேசத்தினர் மிருகத்தன்மையைக் காட்டிக்கொள்ளுகையில் முத்துச்சாமிகளாகத் தேடிக்கொள்ளட்டும்" என்றார் இன்னொருவர்.

---

# உண்மை முத்தி.

கிடைத்தற் கரிய மானிட சரீரத்தை யெடுத்த அருமை தெரிந்த எல்லோருக்கும் முத்தியில் விருப்பம் ஒப்பமுடிந்த விஷயமேயாயினும், முத்தியின் இலக்கண மின்னதெனவும், அதைக் கொடுக்கத்தக்க கடவுளர் இன்னாரெனவும், அவரை வழிபடவேண்டிய மார்க்கம் இதுவெனவும் சந்தேக விபரீதமறப் பிரமாணம், ஆசிரிய வசனம், யுக்தி, அநுபவம் ஆகிய இவற்றிற்குப் பொருந்த விசாரித்தறிவது எல்லோருக்குஞ் சாத்தியப்பட்ட காரியமல்ல. என்னை? அவ் வழிபடு மார்க்கமாகிய சமயங்கள் பலவாறாக விரிந்திருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொரு சமயத்துக்கும் அதனதன் அளவுக்குத் தக்கவாறு சாத்திரங்களும், அச் சாத்திரங்களைப் போதிக்க ஆசிரியர்களும், அவ் வாசிரியர்களை வழிபட அடியவர்களும் ஏற்பட்டிருப்பதால், ஒவ்வொரு சமயத்தவரும் அவ்வச் சமயக் கோட்பாடே சரியானதென நம்பி, அவ் வழியிலேயே காலத்தைக் கழித்துவிடுகின்றனர். எப்படியெனின்:— பிருதிவி முதல் நாதமீறாகவுள்ள தத்துவம் முப்பத்தாறனுள் உலோகாயதனுக்குப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்கள் மாத்திரம் உடன்பாடாகலின், அவன் அந்நான்கு பூதங்களாலாய வுலகம் ஒன்றே மெய், மற்றெல்லாம் பொய்யென்றும், அந் நான்கின் கூட்டரவே ஆன்மாவென்றும், உலக இன்பத்திற் சிறந்த மகளிரின்பமே முத்திநிலையென்றும் சொல்லுவர். இதுவே பாசஞானம் எனப்படும்.

மாயாவாதிக்குப் பிருதிவி முதல் புருட தத்துவம் வரையில் உடன்பாடாகையால், சுத்தமாகிய பரப்பிரமமே மாயோபாதியினால் சரீரத்தையடைந்து ஜீவான்மாவாக விருந்து விவேகஞான முண்டானவுடன் மாயாவஸ்தை கடந்து குடாகாய மகாகாயம்போல் பிரமத்தோடு அபேதமாய் விடுமென்றும், அதனால் பிரமமொன்றே மெய் மற்றெல்லாம் பொய்யென்றும், ஜீவான்மா பரப்பிரமத்தோடு அபேதமாய் விடுவதே முத்திநிலையென்றும் சொல்லுவன். இதுவே பசுஞானம் எனப்படும்.

இவ் விருவருக்கும் சொர்க்க நிரயங்கள் பொய்யாகலான், அடையவேண்டியதோர் பொருளின்மையாய்ப் புண்ணிய கருமங்களில் விருப்பமும், பாவச் செயல்களில் வெறுப்பு மில்லையாம். ஆகவே, இருவர் ஞானமும் ஓர் நீர்மையென்றே துணியப்படும்.

இவ்வாறே உலோகாயத முதலிய புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம் ஆகிய மூவகைச் சமயத் தெய்வங்களும் சுத்த தத்துவமுதல் அசுத்த மாயா தத்துவம் இறுதியாயுள்ள ஒவ்வோர் தத்துவங்களிலே நிலைபெறும்.

அதிகார சிவன், போக சிவன், இலய சிவன் முதலிய சிவ பேதங்கள் சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்கள் ஒவ்வொன்றிலே நிலைபெறும். அவ்வத் தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவமே அவ்வச் சமயங்களுக்கு முத்திநிலையாகும். இவையெல்லாம் உண்மைமுத்தி ஆகமாட்டாது. வேறெதெனின், ஆன்மா மலவிகற்பங்களை யொழித்து, முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேலே தன்னுண்மை யறிந்து ஜீவன்முத்தனாய் சிவதத்துவத்தைப் பெற்றுச் சிருஷ்டிக்கப்படுந் தன்மை முதலியனவின்றிச் சிவனடிக்கீழ் வணங்கி வாழ்வதே உண்மை முத்தியாகும். இதை யுணர்த்துவதுதான் சைவசித்தாந்தம்.

பகர்தருமெய் வகையூர்த்தங் கனுமெங்கு நிறைந்த
பரசிவமே யாயிடினு மேற்றந்தாழ் வுண்டாற்
புகரறுமா டியில்வதன மிகவிளங்கித் தோன்றும்
புகருறுமா டியில்விளக்க மத்துணையின் றதுபோ
னிகரிலுருத் திரமூர்த்தி யிடத்ததிகம் விளக்கம்
நிலைமையின்மற் றையமூர்த்தத் தத்துணையின் றதனாற்
சுகமருளவ் வுருத்திரமூர்த் தியைத்தொழுவோர் பந்தத்
துயரகன்று விரைவிலின்பத் தூயமுத்தி யடைவார்.

(சூதசங்கிதை.)

நல். கன்னப்பமுதலியார், திருவல்லிக்கேணி.

---

உ

# சிவபெருமானே தியானிக்கற்பாலர்.

[அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்.]

(முற்றொடர்ச்சி திங்கள் - கக: பக்கம் - 420.)

சிவபெருமானே தியானிக்கற்பாலர் என்னும் உண்மை திடம் பெறுமாறு வியாசமுனிவர் பூசித்த சரித்திரத்தைக் காட்டுதும். வியாசமுனிவர் கலியுகம் வருநிலைகுறித்து அஞ்சிக் காசியை அடைந்து தவஞ்செய்துகொண்டு இருந்தார். அங்கே தபோதனர்கள் சென்று அவரைவணங்கி 'நீர்வேதமுடிவின் உண்மையாயுள்ளவர் யாரென்று தெளிவாக ஒரு வார்த்தையிற் கூறுதிர்' என்று இரந்தார்கள். மனத்தெளிவின்மையால் வியாசமுனிவர் தபோதனரை நோக்கி அஞ்சாதவராய், 'நாராயணனே பரப்பிரமம்; இஃது உண்மை, உண்மை, உண்மை.'' என்று கையைஉயர்த்தி நின்று சொன்னார். அதைக்கேட்ட முனிவர்கள் 'நீர் கூறியது வேதநூற்பொருளுண்மையாயின், விசுவநாதரது திருமுன்னிலையிற் கூறும்' என்றார்கள். வியாசமுனிவர் சிவனருள் விரவாமையால் எழுந்து சென்று சிவசந்நிதானத்தில் நின்று, அற்பமேனும் அச்சமில்லாதவராய், இருகரங்களையும் மேலுயர்த்தி முன்னர்க் கூறியவாறே கூறினார். வைதிக சைவசித்தாந்த சமயாசாரியராகிய திருநந்திதேவர் கோபங்கொண்டு, கையுயர்த்தியவண்ணமே அசைவற நிற்குமாறு சபித்தார். முனிவர் உயர்த்திய கையை மடக்க இயலாதவராய், அசைவற்று நின்று துன்பமுற்று, விட்டுணுவினுடைய பாதங்களைத் துதிக்க, அப்பொழுது அவர் தோன்றி நின்று கூறுவார்:—''யாது காரியஞ் செய்தனை; என்னையுங் கெடுத்தாய்; வேதங்களை நான்காக வகுத்து அவற்றது உண்மைப் பொருளை அறிந்த நீ இம் மயக்கத்தை எவ்விடத்துப் பெற்றாய்? என்னை முதல் யாவையும் முற்றாகநீக்கி, எல்லோரும் எப்பொழுதும் தியானஞ் செய்யப்படும் ஒப்பற்ற முதல்வர் சிவபெருமான் ஒருவரே என்று தெளிவாக நான்கு வேதங்களுக்கும் தலையாயுள்ள அதர்வசிகோபநிடதம் கூறும்; யாம் எல்லோமும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானஞ் செய்யும் பசுக்கள். அவருடைய அருள் சேர்தலினால் பாவும் பூமியில் தியானப் பொருளென்று புனைந்து சில நூல் கூறுவதையும் அறிந்திலாய்; ஆணவச் செருக்கினால் மயங்கினாய்; நீ உய்ய விரும்பினால் எமக்குத் தலைவராகிய சிவபெருமானுடைய திருவடிகளையே சரணமென்றடைகுதி.' என்றார்.

இருடியானவர் சிவபெருமானையே பரம் என்று தெளிந்து, கண்ணீர் சொரிய நாத்தழும்பத் தோத்திரஞ் செய்து துதித்து

அயருஞ் சமயத்தில் சிவபெருமான் இடபவாகனத்திற் றோன்றி வியாச முனிவரை நோக்கி, "எம்மை வழிபாடுசெய்து முத்தி அடைதி" என்று திருவாய்மலர்ந்து மயக்கநீங்கக் கிருபைசெய்து மறைந்தருளினார். வியாசமுனிவர் அஞ்சி, 'அடியேன் கெட்டேன்; இத்தினம் என்செய்தேன்: இவ் வறியாமைக்குப் பிராயச்சித்தம் யாது?" என்றுன்னி, காஞ்சீபுரத்தை யடைந்து சிவலிங்கந் தாபித்து விதிப்படி பூசைசெய்து துதிக்குஞ் சமயத்தில் சிவபெருமான் தோன்றி, "உனக்கு வேண்டிய வரம் யாது?" என்று வினவி யருள, "அடியேனுக்குத் தேவரீருடைய அன்பையே தந்தருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அவ்விதமே கொடுத்து முனிவர் பூசித்த சார்ந்தாச்சிரய மகாலிங்கத்தில் மறைந்தருளினார். இதனை,

ஐயிரு புராண நூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு ருள்புகல் வியாதி னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

பைய ராவின்மேற் கண்டுயில் பண்ணவன் றனக்குத்
தையல் பாதிய னேபரம் பொருளெனுந் தன்மை
மையன் மானுட ருணர்ந்திட மறைமுனி யெடுத்த
கைய தேயுரைத் திட்டதோர் காசியைக் கண்டான்.

என்னும் கந்தபுராணச் செய்யுட்களாலும், உபதேசகாண்டம் சனகாதியர் சிவார்ச்சனைச் சருக்கத்தாலும், காஞ்சிப்புராணம் சார்ந்தாச்சிரயப் படலத்தாலும் அறிக.

விசுவபதியும், ஆன்மாவும், ஈசுரரும், நித்தியரும், நல்லோரும், அழிவில்லாதவருமா யுள்ள நாராயணரே மிருதியும் அறியற்பாலர் என்றுமகோபநிடதம் கூறுகின்றது. இங்கே விசுவபதித்துவம் முதலிய இலட்சணமுடையவராகக் கூறப்பட்டவர் யாவர் என ஆராயின், அங்ஙனங்கூறப்பட்டவர் சிவபெருமானே. விசுவபதித்துவ முதலிய சிவகுணங்கள் நாராயணருக்குச் செல்லாவாகலின் நாராயணரது ஆன்மா சிவபெருமானே. 'விசுவாதிகர் உருத்திரர்' (தைத், ஆரணி, ய. கஉ. உஅ.) பிரபஞ்சத்துக்கெல்லாம் நாயகத்தன்மை அவருக்கே கூறுகின்றது. உலகத்துக்குப் பதித்துவமாதன் முதலிய இலட்சணமுடையார் நாராயணருக்கு ஆன்மாவாயுள்ள சிவபிரானே என்பது வெளிப்படை. விட்டுணு சிவோகம்பாவனை முதிர்ச்சியுற்ற மகாயோகீஸ்வரர் ஆதலின், சிவபெருமான் அவரது இருதயத்தில் தியேயப் பொருளாய் வீற்றிருந்தருளுவார் என உண்மைநூல்கள் கூறுநிற்கும். 'காட்டுநெற் கூர்போல் மெல்லியதாய், மஞ்சணிறமுடையதாய ஒளி ஒன்றுளது; அந்த (ஒளி)ச் சிகைமத்தியிலே பரமான்மா நிலையுறுகின்றனர்.' என்பது சுருதி. (தைத். ஆரணி. கo. கங. நo.) இச் சுருதிப் பொருளையே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,



"தாணியி னடுவண் வைகுஞ் சரவணப் பொய்கை தன்னில்
விரைசெறி கமலப் போதில் வீற்றிருந் தருளுஞ் செவ்வேள்
பெருவடி வமைந்த மாயன் பிறங்கிய மனத்திற் றண்ணென்
றெரிசுடர் விளக்கத் தூச்சி யிருந்திடு மீசன் போன்றான்."

என்னும் திருவிருத்தத்திலே உவமை முகத்தால் அமைத்து உபதேசித்தருளியமை கண்டுகொள்க. அங்ஙனமே சிவஞானசுவாமிகளும்,

'சேர்ந்தபொற்குண்டத்தோங்குஞ்சிகைத்தழன்மிசையேகம்ப
வேந்தையா வாகித் தேத்தும் புகைபொதி வேள்விச் சாலை
யேய்ந்தசீர்த் தகர வித்தை முறைப்படி யிதய கஞ்சப்
பூந்தழற் சிகைமே லீசற் போற்றுமா யவனை யொக்கும்."

எனக் காஞ்சிப் புராணத்திலே ஓதியருளினமை காண்க.

இச்சுருதியிலே கூறப்பட்ட பரமான்மா சிறிய அக்கினிச்சோதியினுள்ளே இருத்தலானும், சிறுஇடத்தை உடைமையானும், சிறிதெனக் கூறப்படலானும், சர்வவியாபகராகிய சிவபெருமான் அல்லரெனின், அங்ஙனமன்று. உபாசிக்கப்படுபவராதலின், அங்ஙனங் கூறப்பட்டனர். சொரூபத்தினால் அற்பரல்லர் என்க.

"பொறுத்திருந்த புள்ளூர்வா னுள்ளானதி யுள்ளிருந்தங் குன்றேய் களைவான் றனைப்"

"காலமு நாள்க ளூழி படையாமு னேக வுருவாகி மூவ ருருவிற்
சாலவு மாகி மிக்க சமயங்க ளாகி யுருவாகி நின்ற தழலோன்
ஞாலமு மேலை விண்ணொடுலகேழு முண்டுகுறளாயொராலினிலைமேற்
பாலனு மாய வற்கொர் பரமாய மூர்த்தி யவனே நமக்கொர் சரணே"

'பையஞ்சுடர் விடுநாகப் பள்ளிகொள்வா னுள்ளத்தானும்"

என்ற தொடக்கத்த திராவிட சுருதிகளாலும், விட்டுணுவினுடைய இருதயத்துள்ள பரமமூர்த்தி சிவபிரான் என்பது பெறப்பட்டது.

எல்லோர்க்கும் சிவோபாசனாதிகாரம் உளதேனும், நாராயணர் உபாசகர்களுள்ளே சிரேட்டராதலின், அவர் ஈண்டு விதந்து கூறப்பட்டனர். அந்த உபாசியரும் விரூபாக்ஷரும் ஆகிய சிவபெருமானை அபேதபாவனை செய்தமையான், அப்பரமேசுவரர்க் குரிய குணங்களை உலகுக்கு உபாதானரும், சிவபெருமானால் வியாபிக்கப்பட்டவருமாகிய அந்நாராயணருக்கு ஏற்றிக் கூறுதல் சால்பாகும். நீலகண்டசிவாசாரியர் சிவாத்துவித பாடியம் க—ம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்து நான்காம் அதிகரணத்திலும், அரதத்தாசாரியர் சூக்திமாலை நகூ தொடங்கி ருரு—வரையுள்ள சுலோகங்களிலும்உபநிடதங்களை நன்கு ஆராய்ந்து விட்டுணுவினுடைய இருதயத்துள்ளார் சிவனென நிறுவியிருக்கின்றார்கள். ஆண்டுக் கண்டு தேறுக.

———

# நிலக்கிழார்கட்கு அறிக்கை.

பர்மா அரசாங்கத்தின் பைனான்ஷியல் கமிஷனரின் காரியதரிசி பின்வருமாறு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்:—

பக்கோ, ஹந்தாவாடி, இன்சின், தாராவாடி, புரோம், பாசின், மியாங்மியா, பியாப்பம் ஜில்லாக்களில், சாகுபடி நிலங்களை அடமானம் பிடித்துள்ளவர்கள் எந்த டவுன்ஷிப்புக்குள் தங்கள் அடமான நிலம் இருக்கிறதோ அந்த டவுன்ஷிப் ஆபீசில் தங்கள் பெயர்களையும் விலாசங்களையும் ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாமென்று, பரீட்சார்த்தமாகச் சபையோடு கூடிய கவர்னர் தீர்மானித்திருக்கிறார். இப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்வதனால் கிஸ்திப்பாக்கியை வசூல் செய்வதற்காக நிலத்தை விற்க வேண்டிய அவசியமாயின் விற்பனையைப்பற்றி நிலங்களை அடமானம் பிடித்திருப்பவர்களுக்கு முன்னறிக்கை அளித்தல் சாத்தியமாகும். இங்ஙனம் ரிஜிஸ்டர் செய்து கொள்ள விரும்புவோர், ஒரு குவின் நிலத்திற்கு வருஷமொன்றுக்கு ஒரு ரூபா வீதம் அந்தந்த டவுன்ஷிப் ஆபீசில் செலுத்தி ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாம்.

ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளும் மனுவில் எட்டணா கோர்ட் பீஸ் ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருக்க வேண்டும். பிரதிவருஷம் ஜனவரி மாதம் 15ந்தேதிக்குள் இந்தமனு வந்துசேருமானால் அந்த வருஷம் (1933ம்வருஷத்தில்) ஜூலைமாதம் முதல்தேதிவரை அவ்வித மனுக்கள் அனுப்பப்படலாம். ரிஜிஸ்டர் மனுவானது பல குவின்களிலுள்ள நிலங்களுக்குச் சம்பந்தப்பட்டதாயிருக்குமானால் ஒவ்வொரு குவினுக்கும் தனித்தனி மனுவாகப் போடப்படவேண்டும். ரிஜிஸ்டர் செய்துகொள்ள விரும்புகிற ஹோல்டிங் விவரங்களை அதற்கென்று ஏற்படுத்தியிருக்கும் பாரத்தில் எழுதித்தரவேண்டும். அந்தப்பாரங்கள் டவுன்ஷிப் ஆபீசில் இலவசமாகக் கிடைக்கும். முதற்பாராவில் சொல்லியிருக்கும் ஒரு ரூபா பீசையும், கோர்ட்பீஸ் ஸ்டாம்பாக ஒவ்வொரு மனுவிலும் ஒட்டிக்கொடுக்க வேண்டும்.

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கேஸ்களில், நிலத்தின் விற்கிரய நோட்டீசையும அட்டாச்மென்டு உத்தரவையும், ரிஜிஸ்ட்ரேஷன் பாரத்திலுள்ள விலாசத்திற்கு ரிஜிஸ்டர் போஸ்ட் மூலமாக டவுன்ஷிப் உத்தியோகஸ்தர் அனுப்புவார். மேற்படி நோட்டீசில் கண்ட தேதிக்குள், விலாசதார் செலுத்தவேண்டிய கிஸ்தியைச் செலுத்தலாம்.

கிஸ்தி வசூல் சம்பந்தமாக அடமானதார்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்ற இந்த ஏற்பாடானது, ரெவனியூ சட்டத்திற்கு உட்பட்ட ஒருவிதியல்ல. தன்னுடைய பெயரையும் விலாசத்தையும் ரிஜிஸ்டர் செய்து கொண்டுள்ள ஒருவருக்கு டவுன்ஷிப் உத்தியோகஸ்தர், விற்கிரயநோட்டீசை அனுப்பவில்லையென்ற காரணத்திற்காக நிலவிற்பனையானது செல்லுபடியாகாமற் போகாது

உ

# “சிவம்” என்பதின் கருத்து.

சுதுமலை, அம்மன்கோயில்
சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.

சிவமென் பதனைத் தெளிவுறக் கிளத்தின்
உவமையில் சிவ்வா யுறுபட் சரப்பொருள்
கிடத்தலென் றோதுவர் கிளறியே யாயிற்
படைப்புறு பொருளெலாம் பண்பா யிறுதியி
லொடுங்கிடத் தன்னி லொடுங்கிடா தானு
மொடுங்கும் பொருட்கெலா முறைவிட மாகி
நிலைபெற் றென்றும் நேரிலாத் தன்மையாய்
மலைவற நிற்றலே மாண்பொரு ளென்பர்
இறுதியி னுலக மெலாந்தத் துவங்களில்
குறுகியே யொடுங்கக் கோதிலா வந்தத்
தத்துவ மாயையிற் றொடுங்க மாயைதான்
சிவசத் தியிலொடுங் கச்சிவ சத்தியும்
சிவத்திற் றகவுறக் கலக்க
முத்தியி சிவமவை முழுதையு மொடுக்கிச்
சுயம்பிர காசமாய்த் துன்னியே நிற்கும்,
நயம்படு வவ்வெனு நல்லட் சரப்பொருள்
அப்பொருட் குணமா மருளுறு சத்தியை
செப்பமா யறியச் சிந்தையி லுணர்த்தும்
ஒப்பிலாச் சத்தி யொருசிற் றேரோன்
வெப்புறு மொளியை விளம்பிட நிகர்க்கும்
ஒளியும் பரிதியு மொன்றா யுரைக்கினும்
தழுவிய குணங்குணி தன்மைவேற் றுமையால்
இருமைய தாக எண்ணப் படுதல்போல்
பெருமைசேர் சத்தி சிவமெனப் பேசும்
இரண்டுங் குணகுணி யெனும்பா வத்தால்
இரண்டெனுந் தன்மை யியனுடைத் தாக
மதிக்கப் பொருளை மாறிலாப் பயக்கும்
துதித்திடு பெயராய்த் துய்யவி ரியல்பும்
அடக்கியே சிவமென அரும்பதி நூல்கள்
இடம்பெற வுரைக்கும் செகந்தனி லன்றே.

உ

# திருப்பெருந்துறை மேவிய சிவனே!

திருச்சிற்றம்பலம்.

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
னருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னடந் தேன்விடைப் பாகா
சங்கரா வெண்ணில் வானவர்க் கெல்லா
நிலைய னேயலை நீர்விட முண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள்—திருவாசகம்—செத்திலாப்பத்து.

திருப்பெருந்துறை யென்பது பாண்டிநாட்டிலே யுள்ள வைப்புஸ்தலம். இத்தலம் * திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. இந்தக்ஷேத்திரத்தில் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் சிவபெருமானை வழிபட்டுப் பல பேறுகள் பெற்றிருக்கிறார்கள். இங்கே சிவபெருமானைப் பூசிக்கும் அந்தணர்கள் முந்நூற்றுவர் நிலங்களையும் ஒருவன் வல்வழக்குப்பேசித் தன்னுடையன வென்றுகொண்டு, 'இந்நிலங்களில் எவ்வளவு ஆழம் வெட்டினாலும் நீர் ஊறா'தென்று சொல்லச் சிவபெருமான் 'இந்த நிலங்களில் எங்கே வெட்டினாலும் உடனே தண்ணீர் ஊறும்' என்று சொல்லி அவ்வாறே பாண்டியனுக்குக்காட்டி அந்நிலங்களை மீட்டி அவர்கட்கு அருள்புரிந்தார். இந்தஸ்தலம் சிவபெருமானும் உமாதேவியாரும் அருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் பதி.

உலகத்திலே சத்திபீடங்கள் ஐம்பது உள்ளன. அவற்றுள் நாற்பத்தொன்பது பீடங்கள் காரியபீடங்கள்: இந்த ஸ்தலத்திலுள்ள யோகபீட மொன்றே காரணபீடம். தக்க யாகத்தை அழித்த வீரபத்திரக்கடவுள் அந்தத் திருக்கோலத்துடன் அம்பிகையின் யோகத்தைக் காப்பவராய் அம்பிகையின்சந்நிதியில் எழுந்தருளியிருக்கிறார்.

* 'பெருந்துறையுங் குரங்காடு துறையினோடு'. 'பெருந்துறை காம்பீலி பிடவூர்'



இங்கே சுவாமிதிருநாமம்—ஆன்மநாதர்; தேவியார் திருநாமம்—சிவயோகநாயகி. தீர்த்தம்—* வெள்ளாறு. விருக்ஷம்—குருந்தமரம்.

சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவரான ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளைச் சிவபெருமான் ஆண்டுகொண்டருளிய க்ஷேத்திரம் இது. ஆதலால், இக்காலத்து இந்தஸ்தலம் ‡ ஆளுடையார்கோயிலென்றும் வழங்கப்படுகிறது. பிரமாமுதலிய தேவர்கட்கும் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உபதேசித்த குருமூர்த்தி குருந்தமரத்தடியில் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஸ்தலத்தில் திருநந்தி தேவரும் சண்டேசருமே இல்லை. ஆகலின், சிவாலய தரிசனத்திற்குத் திருநந்தி தேவரிடம் பெறும் அநுஞ்ஞையையும் தரிசனத்தின்பின் சண்டேசரிடம் பெறும் தரிசனபலனையும் ஸ்ரீ மாணிக்கவாசகரிடம் பெற்றுச்செல்லுதல் அடிப்பட்ட சான்றோர் வழக்கு. புரூரவச் சக்கரவர்த்தி ஆன்மநாதருக்கும் சிவயோகாம்பிகைக்கும் திருவிழா நடத்தல் வேண்டுமென்று விரும்பிய காலத்து, ஆன்மநாதர் சக்கரவர்த்தியின் கனவில் எழுந்தருளி', ※ 'அரசனே! நீ நமக்கு விழாச்செய்யவிரும்பிய கருத்தை விட்டுவிடு: நம்மைப்பாடி உலகத்தை வாழவைத்த மாணிக்கவாசகனுக்குத் திருவிழாச்செய்' என்று அருளியபடி. அக்காலந்தொட்டு இங்கே ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளுக்கே எல்லா உற்சவங்களும் நடந்துவருகின்றன.

பாசுரப்பொருள்: விடைப்பாகா—இடபத்தை வாகனமாகக் கொண்டு செலுத்துபவரே, சங்கரா—எல்லாவுயிர்கட்கும் இன்பத்தைச் செய்பவரே, எண்ணில்—ஆராயுமிடத்து, வானவர்க்கெல்லாம் நிலையனே—தேவர்களுக்கெல்லாம் ஆதாரமா யிருப்பவரே, அலைநீர் விடம் உண்ட நித்தனே—திருப்பாற் கடலினின்றும் எழுந்த ஆலகாலவிடத்தை அமுதுசெய்தருளிய அழிவில்லாதவரே, அடையார்புரம் எரித்த சிலையனே—பகையசுரர்களது முப்புரங்களையும் எரித்தழிக்கக்கொண்ட வில்லினையுடையவரே, திருப்பெருந்துறை மேவிய சிவனே—திருப்பெருந்துறை யென்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மங்கலமூர்த்தியே, புலையனேனையும் பொருளென நினைந்து—(தேவரீர்) ஒன்றுக்கும் பற்றாத நாயேனையும் பொருளாகத் திருவுள்ளத்து அடைத்து, உன் அருள் புரிந்தனை—(ஒப்பற்ற) உமது திருவருளை அடியேனுக்கு அளித்தருளினீர், புரிதலும்—நீர் அவ்வாறு

* இந்நதி ஞானந்த வெள்ளாறு என்றுஞ் சொல்லப்படும். திருப்பெருந்துறைப் புராணம், வெள்ளாற்றுப்படலம்-25. திருவாசகத்துத் தராசிகத்தில் வரும் ஆனந்தமென்னும் நதி இதுவே என்பர்.
‡ ஆவுடையார் கோவிலென்பதும் உண்டு.
※ திருப்பெருந்துறைப்புராணம், புரூரவன் திருவிழாச்செய்தபடலம்—எ.

126929

திருவருள் புரிதலும், களித்துத் † தலையினால் நடந்தேன்—(அடியேன்) செருக்கு அடைந்து மனம்போனவாறெல்லாம் திரிந்தேன், எனைச் செத்திடப் பணியாய்— (தேவரீர்) அடியேனை நானென்பதில்லாதவாறு அருள்புரிவீராக என்பது.

### சிவபெருமானே உயிர்களுக்கு இன்பம்செய்பவர்.

சிவபெருமானை வேதம்* 'பிரமத்தினது வடிவம் ஆனந்தம்' என்றுதிக்கின்றது. ‡'ஈறிலாப் பதங்கள்யாவையுங் கடந்த வின்பமே' என்றது தமிழ்வேதம். ¶ 'அவற்குருவ, மின்பகனம்' என்று அறுதியிட்டு அருளிற்று சித்தாந்த சாத்திரம். இவற்றால் சிவபெருமான் ஆனந்த வடிவினரென்பது பெறப்பட்டது. இவ்வாறு சிவபெருமான் எல்லையில்லாத ஆனந்தவடிவினராயிருத்தலினாலேதான் அவருக்கு நாம்விரும்பும் ஆடை மாலை ஆபரணம் சந்தன முதலிய அநுலேபனங்களிலே விருப்பமில்லை: இதனை உயிர்களாகிய நாம் உணரும் பொருட்டே அவர் யானைத்தோல் பாம்பு எலும்பு சாம்பலென்பவற்றை அவைகளுக்கு உரிய இடங்களில் தரித்தருளினார். இவ்வுண்மை பாகவதத்திலே '§ ஆடை மாலை ஆபரணம் மேற்பூச்சு என்பவற்றால் உடம்பினைக் கொண்டாடுங் கீழ்மக்கள், தன்னானந்தத்தில்மூழ்கியுள்ளவனாகிய சிவபெருமானது கருத்தை அறியாதவர்களாய் அப்பெருமானது (உலகியலின் மாறுபட்ட) நடையை நகைக்கின்றார்கள்' என விளக்கப்பட்டது.

இனி, இவ்வித ஆனந்த வடிவினராகிய சிவபெருமானே பிரமா முதலிய தேவர்கள் மனிதர்கள் ஆதிய எல்லாவுயிர்களுக்கும் ஆனந்தத்தை அளிக்கின்றார். வேதம் '** இவனது (சிவபெருமானது) ஆனந்தத்தினது சிறுதுளி மாத்திரையே ஏனைய பூதங்கள் (உயிர்கள்) வாழ்ந்து அநுபவிக்கின்றன' என்று சிவானந்தத்தின் அற்பத்துளியின் மகிமையை வர்ணிக்கின்றது.

1 'ஆனந்த கூத்த னருள்பெறின நவ்வணமே
யானந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம்' என்றும்,

† தலையினால் நடத்தல் என்பது இப்பொருளில் வருதலைத் 'தருக்கித்தலையினடந்த வினைத்துணையேன்' என்னுந் திருவாக்கான் அறிக.

* 'ஆநந்தம் ப்ரஹ்மணோ ரூபம்' என்பது வேதம்.

‡ திருவாசகம் ¶ திருவருட்பயன்

§ இதில் வரும் தன்னானந்தத்தில் மூழ்குதலின் உண்மையைச் சிவஞான பாடியம்xI. 1 - ல் கண்டுதெளிக.

** 'ஏதஸ்யை வாநந்தஸ் யாந்யா-நிபூதாநி மாத்ரா முபஜீவந்தி'—என்பது வேதம்.

1 திருவாசகம்.



* 'அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்' என்றும்,
* 'நாயேனை, யானந்த வெள்ளத் தழுத் துவித்தான்' என்றும்,
† 'இன்பதனை யெய்தவார்க் கீயுமவன்' என்றும்,

வரூஉம் திருவாக்குக்களும் சிவபெருமான் ஒருவரே நமக்கு எல்லையில்லாத ஆனந்தம் அளிப்பவரென்பதை வலியுறுத்தும்.

நமது பெத்தநிலையிலே சிவபெருமான் துன்பங்களைக் கொடுத்தலினாலே அவர் நமக்கு எப்பொழுதும் இன்பம் செய்பவரென்று கொள்வது எப்படிப் பொருந்துமென்னும் சந்தேகமும் வேண்டப்படுவதில்லை. ‡ வைத்தியன் சில வியாதிகளைத் தேன் கற்கண்டு பால் நெய் முதலியவற்றை உண்பித்துத் தீர்ப்பன்: வேறு சில வியாதிகளை அறுத்துக் கீறித் தீர்ப்பன். ஆகவே, முறை வேறாயினும் வியாதியைக் குணப்படுத்துவதே வைத்தியனது நோக்கம். அதுபோலச் சிவபெருமானும் நமது பெத்த நிலையிலே நல்வினைப் பயனாகிய இன்பத்தையும் தீவினைப் பயனாகிய துன்பத்தையும் ஊட்டி, வினைமாசு கழித்து இன்பத்தையே அருளுவது லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறார். இவ்வுண்மை,

§ 'சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலா
லலமில னொடொறு நல்கு வானவன்' என்றும்,

† 'நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலனு பேர்சங் கரன்' என்றும்,

வரூஉம் திருவாக்குக்களால் அறியப்படும். இதனால் சிவபெருமான் எல்லையில்லாத ஆனந்த நிலையரென்பதும், அவரே தேவர் மக்கள் முதலிய எல்லாவுயிர்களுக்கும் இன்பம் அளிப்பவர் என்பதும், அவர் நமது பெத்த நிலையிலே துன்பங் கொடுத்தலும் நமது வினைமாசு கழித்து ஆனந்த மளித்தற் பொருட்டே யென்பதும் நிறுவப்பட்டன.

### சிவபெருமான் ஆலாலம் உண்டருளினமை.

ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் தங்கள் வாழ்நாள் மிகுதியாயிருக்கும் பொருட்டுத் திருப்பாற் கடலிலே மந்தர மலையை மத்தாக நிறுத்தி வாசுகியென்னும் பாம்பைக் கயிறாகப் பிணித்து அமுது கடைந்தார்கள். அப்பொழுது வாசுகி வருத்தம் பொறுக்க முடியாமல் விஷத்தைக் கக்கிற்று. அவ் விஷம் எங்கும் பரவுதலால் தேவர்களிலும் அசுரர்களிலும் பலர் மாண்ட

* திருவாசகம் † திருவருட்பயன்.

‡ சித்தியார் II 35. § திருநாவுக். தே.

னர். திருமாலின் வெள்ளைமேனி கருகிற்று: பிரமதேவரது பொன்மேனி புகைநிறமாயிற்று. இறந்தவர்கள் தவிர எஞ்சிய தேவர்களும் அசுரர்களும் பிரமவிஷ்ணுக்களும் கயிலாயத்தை அடைந்து தங்களைக் காத்தருளும் பொருட்டுச் சிவபெருமானைப் பிரார்த்தித்தார்கள். பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் அவ் விஷத்தைத் தமது திருக்கரத்தி லேற்று உண்டு அதனைத் தமது கழுத்தில் நிறுத்தியருளினர்.

வேதம் இவ் வருஞ் செயலை '*கேசீ விஷஸ்ய பாத்ரேண யத் ருத்ரேணாபிபத்ஸஹ' என்று புகழ்கின்றது. (வியோம) கேசியாகிய சிவபெருமான் பயங்கரமான பாத்திரத்தால் விஷத்தை உண்டருளினாரென்பது பொருள். இங்கே பயங்கரமான பாத்திரமென்றது சிவபெருமானது திருக்கரத்தை. அது விஷத்தை ஏற்று உண்ணுதற்குச் சாதனமாயிருந்தமையால் பாத்திரமென்றும், அகந்தைகொண்ட நான்முகன் தலையைச் சேதித்தமையால் பயங்கரமானதென்றும் கூறப்பட்டது. இனி, உருத்திரனாகிய பாத்திரத்தாலெனக்கொண்டு ஆலால சுந்தரரால் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். ஆலால சுந்தரர் விஷத்தைக் கொண்டுவந்து சிவபிரான் பாற் கொடுத்தமை கந்தபுராணத்துக் கூறப்பட்டது.

இவ்வாறு சிவபெருமான் ஆலால விடத்தை உண்டருளினமை, அவர் பிரமா முதலிய தேவர்களெல்லாம் இறவாது காக்கப்படல் வேண்டுமென்னும் பெருங்கருணை விலாசமுடையவரென்னும் உண்மையை விளக்குவதாகும்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்,

‡ 'கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

என்றருளிச்செய்வதனால் மேற் கூறப்பட்டது தெளியப்படும்.

அன்றியும் இவ்வாறு விஷத்தை உண்டருளினமை, † ஏனைய தேவர்களால் முடிக்க இயலாத பெருங்காரியங்களை முடித்தருளுதலாகிய சிவபெருமானது பேராற்றலைக் குறிப்பதுமாகும்.

---

* ருக்வேதம் x. 136. 7.   ‡ திருவாசகம் திருச்சாழல்,

† 'அநேக இதராஸாத்ய கர்ம கரத்வம் ஸூசிதம்'—என்பது சிவதத்துவ ரகசியம்:—

'சகமெ லாம்பொடி படுத்தெழுந் தழல்விட மிடற்றிற்
றிகழ வைத்தனன் முப்புர மெரியெழச் சிரித்தோன்



இவ் வாலாலத் தோற்றரவு சிவபெருமானது திருவருளின்றித் தேவர் முதலியோர் தொடங்கிய செயல்கள் கடைபோக முடியா என்னும் உண்மையையும் உணர்த்தும். ஸ்ரீ பாஷ்யகாரர் ‡ 'அரன் நினைந்தவாறன்றியாகாமை தக்கன் வேள்வி, மார்க்கண்டி வாழ்நாள், ஆலாலத் தோற்றரவு முதலியவற்றால் இனிது விளங்கக் கிடத்தலின்' என்றருளிச் செய்தலான் அஃது அறியப்படும்.

## சிவபெருமானே தேவர்கட்கெல்லாம் ஆதாரம்.

வேதம் § எப்படிச் சக்கரத்தின் குடத்திலும் சுற்றுவட்டத்திலும் ஆரைக்கால்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பரமாத்மா (சிவபெருமான்) இடத்தில் எல்லாப் பொருள்களும் எல்லாத் தேவர்களும் எல்லா வுலகங்களும் எல்லாப் பிராணன்களும் இந்த எல்லா வுயிர்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.' எனக் கூறி யருள்கின்றது. இதனால், சிவபெருமானே தேவர் முதலிய எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாயிருப்பவரென்பது அறியப்படும்.

* உமாதேவியார் விளையாட்டுக் காரணமாகச் சிவபெருமானது திருக்கண்களைப் புதைப்ப, உலகில் சூரியன் சந்திரன் முதலியோர் ஒளியிழந்து வாடினமையும், பின்னர் உமாதேவியார் புதைத்த கண்களை விடுப்ப அவர்கள் ஒளிபெற்றமையுங் கூறும் புராண வரலாறும், † சிவபெருமான் சனகாதி முனிவர்க்கு ஞானநுபவம் தேற்றுதற்குக் கல்லால நீழலில் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளிய பொழுது மன்மதனாதி தேவர்கட்குப் போக விருப்பமில்லா தொழிந்தமையும், பின்னர் அப்பெருமான் உமாதேவியாரை மணந்த காலத்துப் போக விருப்பமுண்டானமையும் கூறும் புராண வரலாறும், சிவபெருமானே தேவர்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பவரென்று வேதம் கூறியதனை உலக நிகழ்ச்சியின் வைத்து நன்கு நிலைநிறுத்தும் சான்றுகளாய் விளங்குகின்றன.

இப் பதிகத்தில் 'செத்திடப் பணி' த்தல் என்பது உயிர் நான் என்னும் செருக்கு முற்றும் ஒழியுமாறு அருள்புரியச் சிவபெரு

---

அகல ருத்திறத் தெண்குண நிறைந்தபே ராண்மைப்
பகவன் மேன்மைமற் றெம்மனோ ரளவிடற் பாற்றோ.'

என்பது காஞ்சிப்புராணம்-மணிகண்டேசப் படலம், ருருரு.

‡ சிவஞான சித்தியார் I. 61. சுவாமிகள் உரை.

§ 'தத்யதா ரதநாபௌச ரதநேமௌசாரா: ஏவமேவாஸ்மிந்நாத்மநிஸர்வாணி பூதாநி ஸர்வே தேவா: ஸர்வே ப்ராணா: ஸர்வே ஏதே ஆத்மாந: ஸமர்பிதா:|-' என்பது வேதம்.

* சிவஞான சித்தியார் I. 52

† ஷை I. 53.

மானை வேண்டிக்கொள்ளுதலைக் குறிக்கும். அவ்வாறு தன்னை முழுவதும் இழந்துநின்ற நிலையிலேதான் உயிர் சிவானந்தத்தை ஆர அநுபவிக்கும். ஸ்ரீ பாஷ்யகாரரும்,

> * என்னை முழுக்க விழுங்க விடத்தே
> தன்னை விளக்கிய சாலினை சைக்கோன்'

என்று அருளிச் செய்திருப்பது இவ்வுண்மையை நன்கு விளக்கும். 'சிவானந்தம் அளவறுக்கொணாமை' எனவரும் பதிகக்கருத்தும் இதுவே.

இவ்வாறு நிரதிசய ஆனந்த வடிவினராயிருந்து தம்மை அடைந்த உயிர்களுக்கெல்லாம் சிவன் முத்தி பரமுத்தி சுகங்களை அளித்தருள்பவரும், உயிர்களின் பெத்த நிலையிலே அவைகளுக்கு ஆனந்தம் அருள்வதை லக்ஷியமாகக்கொண்டு இன்பதுன்பங்களை ஊட்டி வினைமாசு கழிப்பவரும், தேவர் அசுரர் முதலிய மூன்று உலகத்தாருக்கும் அச்சத்தை விளைத்த கொடிய ஆலாகல விடத்தை உண்டு கழுத்திலே நிறுத்தி உயிர்கள் காக்கப்படல் வேண்டுமென்னும் தமது பெருங்கருணையையும், பிறரால் முடிய இயலாதவற்றை முடித்தருளுதலாகிய தமது பேராற்றலையும், தாம் நினைந்தவாறன்றி உயிர்கள் நினைந்தவாறு காரியங்கள் முற்றுப்பெறா என்னும் உண்மையையும் வெளியிடுபவரும், உமாதேவியார் தமது திருக்கண் புதைத்தல் விடுத்தல்களானும் தாம் யோகமூர்த்தியாதல் போகமூர்த்தியாதல்களானும் ஆராய்ந்தவழித் தாமே தேவர்களுக்கெல்லாம் ஆதார மூர்த்தியாயிருப்பவரும், அறக்கடவுளை விடையாகக்கொண்டு அறவழியில் நடப்பவர்களுக்கு அவரவர் விரும்பியவற்றை அருள் புரிபவரும், தீயோராயிருந்த முப்புரத்தசுரரை யொறுத்து அவர்களுக்கு அருள் பாலிப்பவரும், தற்போதம் அற ஒழிந்தவிடத்து ஆனந்தம் அருள்பவருமாகிய சிவமூர்த்தியே நாம்வணங்குதற்கு உரியராவர்.

சமயஞானம்.

---

* இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

---

திருச்சிற்றம்பலம்.

> மாய னேமறி கடல்விட முண்ட வான வாமணி கண்டத்தெம் மமுதே
> நாயி னேனுனை நினையவு மாட்டேன் நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
> பேய னாகிலும் பெருநெறி காட்டாய் பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
> சேய னாகினின் றலறுவ தழகோ திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!

திருச்சிற்றம்பலம்.

# அன்பினில் இன்பு.

வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்.

அன்பிலே இன்பம் விளையுமென்று ஆன்றோர் கூறுவர். அஃதாமாறு காட்டுதும்.

அன்பாவது: ஒருவருக்குத் தாங் கருதிய பொருட்கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. அந் நெகிழ்ச்சி அப் பொருட்குந் தமக்கு முண்டாகிய கலப்பினாலே முதிர அதனால் அவ் வுள்ளத்தின்கண் ஒரு சுகநிலை தோன்றுகிறது. அதுவே இன்பமெனப்படும். அவ் வின்பம் இரண்டு வகைப்படும். சிற்றின்பமும் பேரின்பமுமென.

சிற்றின்பமாவது: தம்முட் டொடர்ந்த அன்பு காரணமாக ஒருவனு மொருத்தியும் எனப்பட்ட இருவர் தம்மிற் கூடிய விடத்து, அவ் விருவருள்ளத்தும் பிறந்த இன்பம். அவ் வின்பமும் அன்பு காரணமாகக் கலந்த அவ் விருவருள்ளத்தும் அவ் வன்பின் முதிர்ச்சியினாலே தோன்றியதொரு சுகநிலையேயாம். ஆகலின், அஃதும் அன்பின் விளைவெனப்படும். இது பற்றியே "அன்பினைந்திணை" என இறையனாரும், "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" யெனத் தொல்காப்பியனாரும் கூறினார்கள். எப்பொழுது ஒருவரிடத்தே அன்பு முதிருகின்றதோ அப்பொழுதே அவர் செய்யும் துன்பமும் இன்பமாகின்றது. ஆகலின், அன்பே இன்பங்கட்கெல்லாம் அடியாயுள்ளது என்பது நன்கு பெறப்படும்.

> வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந்
> தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்.

என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. தலைவனுக்குந் தலைவிக்கு முண்டாய ஊடற்கண் தலைவி ஊடிச்செய்வனவும் அவனுக் கின்பமாகின்றதனானும் அன்பே இன்பாதல் பெறப்படும். ஊடலு மின்பாதலி னன்றோ,

> புலத்தலிற் புத்தேளு டுண்டோ நிலத்தொடு
> நீரியைந் தன்னா ரகத்து.

என்றும்,

> ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வியர்ப்பக்
> கூடலிற் றோன்றிய வுப்பு.

என்றுந் தேவருங் கூறினர். இனித் தலைவனுந் தலைவியும் ஐம்புல வின்பங்களை ஆரத்துய்த்தலாலே இன்பமடைதலன்றி, ஒருவரை யொருவர் தனியே காண்டற்கண்ணும் இன்பமடைவர்; ஒருவரை யொருவர் தீண்டுதற்கண்ணும் இன்பமுறுவர்; கவவுக்கைகொண்டு அணைத்தற்கண்ணும் இன்பமடைவர்; ஒருவர்க் கொத்த உவமப்பொருளை ஒருவர் காண்டற்கண்ணு மின்பமடைவர்; இவைகளெல்லாம் அன்பின் விளைந்த இன்பங்களேயாம். கண்ணால் நோக்கியவிடத்து இன்ப மடைதலை, இராமபிரானைச் சீதாதேவி கண்ணால் நோக்கியவிடத்து அமுத மருந்தினவளை யொத்துத் தனது உடம்பு பூரித்தாள் என்னுங் கருத்தமைய,

கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணைப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
அருங்கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துடல் தடித்தாள்.

என்றும், இராமபிரான் சீதாதேவியைக் கண்டவிடத்து,

அன்னவளை யல்லளென வாமென வயிர்ப்பான்
கன்னியமிர் தத்தையெதிர் கண்டகடல் வண்ணன்
உன்னுயிர்நி லைப்பதொ ருருத்தியொ டுழைத்தாண்
டின்னமிழ்தெ ழுக்கனிகொ ளிந்திரனை யொத்தான்.

என்றும் கம்பர் கூறுதலானும், தீண்டற்கண் ணின்பமடைதலை, முருகபிரான் வள்ளிநாயகியை நோக்கி, நீ ஆடிய சுனையாயும், அணியுஞ் சாந்தாயும், சூடிய மலராயும், உன் மேனியைப் பொருந்தப் பெற்றிலேன் என்று கூறியதாக,

ஆடிய சுனையதாய் அணியுஞ் சாந்தமாய்
சூடிய மலர்களாய்த் தோயப் பெற்றிலேன்.

என்று கச்சியப்பர் கூறுதலானும், ஒருவரை அணைத்தற்கண் இன்பமுண்டாதலை, தலைவியும் தலைவனு முடன்செல்லுங் காலத்து, இருவருந் தமக்குள்ள அன்பின் ஆராமையினாலே ஒருவர் தலையோடு ஒருவர் தலை பொருந்தவும், ஒருவருடைய ஒரு காலோடு ஒருவருடைய ஒரு கால் பொருந்தவும், ஒருவர் மேனியோடு ஒருவர் மேனி பொருந்தவும், ஒருவரை யொருவர் கையா லணைத்துத் தழுவிக்கொண்டு செல்லுதல் பாதி வடிவு ஆணும் பாதி வடிவு பெண்ணுமாகிய சிவனுடைய அர்த்தநாரீசுவர வடிவம்போல இருந்ததெனக் கூறும்

"சிலம்புஞ் சிறுநுதலும் சில்குழலும் பல்வளையு மொருபாற் றோன்ற
அலங்கலந் திண்டோளு மாடெருத்து மொண்குழையு மொருபாற் றோன்ற
விலங்க லரும்சுரத்து வேறுருவி னோருடம்பாய் வருவார்க் கண்டே
அலங்க லவிர்சடையெம் மண்ணல் விளையாட்டென் றகன்றேம் பாவம்"

என்னுஞ் செய்யுளானும், உவமைப்பொருளைக் காண்டலு மின்ப மாதலை,

ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகும்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் பூத்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தான்.

என்று கம்பர் கூறிய செய்யுளானும் அறியலாகும்.

இனித் தமது குழவியிடத்தே வைக்கும் அன்பின் முதிர்ச்சியிலே தந்தைதாயர்க்குப் பெரியதோ ரின்ப முண்டாகின்றது. அவ் வின்பத்தைச் சிறப்பித்து,

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

என்றும்,



அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

என்றும் திருவள்ளுவனார் கூறமாற்றானு மஃது அறியப்படும். இவ் வின்பமெல்லாம் யாக்கையும் செவ்வியு முள்ள துணையுமே துய்க்கப்படுதலின் சிற்றின்பமாயின.

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

என்னுங் குறளுரையில், சிற்றின்பம் நிலையில்லாத வின்பமென்றும், பேரின்பம் நிலையுடைய வின்பமென்றும் பரிமேலழகருங் கூறுதல் காண்க.

பேரின்பமாவது: பக்குவமமைந்த ஒருயிர்க்குப் பரம்பொருட்கண் உண்டாய அன்பு, அப்பொருட்கும் அவ்வுயிர்க்கு முண்டாகிய கலப்பினாலே முதிர, அதனால் அதன தறிவின்கண்ணே தோன்றுஞ் சுகநிலையேயாம். அஃது எக்காலத்தும் அழிவின்றி நிலைபெறுதலின் பேரின்ப மெனப்படும்.

பக்குவமுடைய ஒருயிர், பரம்பொருளாகிய இறைவனிடத்தே அன்பு செய்து, அவனருள் பெற்று, அவனுந்தானுமாகிய பேதமின்றி, அவனே தானாய் நின்று வழிபட, இறைவனும் அவ் வுயிர் தன்பால் வைத்த அன்பின் முதிர்வை நோக்கித் தானும் அவ் வுயிர்க்கண் அன்புவைத்து, அதனன்பிலே இன்புருவாய்த் தோன்றியருளும் நிலைமைபோலவே, ஒரு தலைவனும் ஒரு தலைவியிடத்தே அன்புசெய்து, அவளுடன்பாடு பெற்று, தானுமவளும் என்னும் வேற்றுமையின்றித் "தானே அவளாய்" ஒற்றுமைப் பட்டுக் கூட, அக்கூட்டத்து இருவருள்ளத்தும் உண்டான அன்பின் முதிர்விலே ஓரின்பம் பிறக்குமென்பதை விளக்குதற்கே,

தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்.

என்று இறையனார் கூறியருளினார். இச்சூத்திரத்தில் தூலமாகச் சிற்றின்பப்பொருளமைந்துளதேனும், சூக்குமமாகப் பேரின்பப் பொருளும் அமைந்திருத்தலை அறிஞர் நுணுகி ஆராய்ந்துணர்க. இவ்விருவகைப் பொருள்களும் திருக்கோவையாரினும் அமைந்துள்ளன. தேவார திருவாய்மொழிகளிலும் சிற்சில பதிகங்களில் அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். எனினும், ஒன்று காட்டுதும்.

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனிருக்கு மாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே.

இதனால், ஆன்மாவைத் தலைவியாக வைத்தும் சிவத்தைத் தலைவனாக வைத்தும் சூக்குமப் பொருளமையக் கூறியிருத்தல் காண்க.

இங்ஙனம் அன்பினில் இன்பம் பிறத்தல் பற்றியே, "அன்பினுள் விளைந்த ஆரமுதே!" என்று மணிவாசகரும்,

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

என்று திருமூலரும் கூறினார்கள் என உணர்க. ஈண்டு அமுது என்றது இன்பத்தினை. (ஞாயிறு)

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

மறைத்திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்:—

பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தி அடைந்துவருகிறதைக் குறித்துச் சந்தோஷமடைகிறேன். அஃது இன்னும் சிறப்புற்று விளங்கச் செய்வித்தருள வேண்டுமென்று ஸ்ரீ நடராஜமூர்த்தியைப் பிரார்த்திக்கிறேன்.

தென்மலையாளம், பாலக்காடு, கல்பாத்தி, சிவஸ்ரீ K. C. சுந்தரக்குருக்கள் அவர்கள்:—

சீரிய சிவநேசச் செல்வராகிய ஆசிரியரவர்கட்கு: தாங்கள் மிகுந்த ஊக்கத்துடனும் உள்ளன்புடனும் நடாத்திவரும் அருமைச் சிவநேசனைக் கண்டுகண்டு களிப்புறுகின்றேன். திருச்சிற்றம்பல தேசிகன் திருவருளால் சிறப்புற்றோங்குவதாக.

கோயமுத்தூர், சிரவணபுரம், கௌமார மடாலயத்திருந்து உயர்திரு கந்தசாமி சுவாமிகள் அவர்கள்:—

சிவநேசன் இந்த ஆண்டில் சைவ வுலகிற்குச் செய்யும் பேருதவி அளப்பில. அத்தகு பத்திரிகையும், அதைத் திருவருட் டுணைகொண்டு நடாத்தி வரும் ஆசிரியரும், சைவத்தமிழுலகின் செல்வமாக நீண்டகாலம் விளங்க வேண்டுமென்று, பரம சற்குருநாதன் திருவடிகளை நினைத்துப் பிரார்த்திக்கிறோம்.

காரைக்குடி சிவநேசச்செல்வர் ராம. உ. இராமசாமி செட்டியார் அவர்கள்:—

சீருற்ற சிவநேசன், தேருற்ற சிவமகிமை
பாருற்றெங் கெங்குமொளி, ஏருற்று வாழியவே!



25. சந்தமிகுந் தங்குறமான் சார்ந்துமயி லின்புற்றுக்
கந்த னிகராங் கழுக்குன்றே—அந்தமிகும்
அஞ்ச மறியா னருள்வரங்கேட் கும்மடியார்
அஞ்ச மறியா னகம்.

(கு - பு.) முருகவேளுக்கும் மலைக்கும் சிலேடை. சந்தம் - அழகு; சந்தனமரம். அம் குறமான்சார்ந்து; குறமான் - வள்ளி. அங்கு உற மான் சார்ந்து; உற - மிக. மான் - ஒருவகைமிருகம்; மயில் இன்புற்று - மயிலில் இருந்து இன்புற்று; மேகத்தால் இன்புற்று; மய் - மை; போலி. மை இல் இன்புற்று எனப் பிரித்துக் குற்றமில்லாத இன்பத்தை அடைந்து என்றலுமாம். அந்தம் - அழகு. அஞ்சம் அறியான் - பிரமனாகிய அன்னப் பறவையால் அறியப்படாதவன். அடியார் அஞ்சும்படி மறியான்; மறியான் - இல்லை என்னான். (உரு)

26. சுருதிபயின் றோதிமமாய்ச் சூழ்கலைமா னேந்திக்
கருது மயனாங் கழுக்குன்றே—பொருமமணர்
நட்டரா கத்தா னலிவித்தார் சொற்பதிகம்
நட்டரா கத்தா னகர்

(கு - பு.) பிரமனுக்கும் மலைக்கும் சிலேடை. சுருதி பயின்று - வேதம் தங்கப்பெற்று. இம்மலை வேதவடிவென்று கூறப்படும். ருரு-ஆம் செ. பார்க்க. ஓதிமம் - அன்னம், மலை. கலைமான் - கலைமகளை; ஆண்மானையும் பெண்மானையும். அயன் - பிரமன். அமணர் நட்டராக தான் நலிவித்தார் - நஷ்டராகும்படி அமணரை நலிவித்த சம்பந்தமூர்த்திநாயனாரது; நட்டராகத் தான் - நட்டராகப் பதிகத்தையுடையவர்; நட்டராகம் - ஒருபண். (உசு)

27. கண்ணாரனார் தாட்கிட்டுக் காேனன மேனிவந்து
கண்ணனெனு மாலாங் கழுக்குன்றே—நண்ணும்
மறைக்காட்டி னார்வான் மகிழ்பாசூ ரிற்பாம்
பிறைக்காட்டி னார்வா ழிடம்.

(கு - பு.) திருமாலுக்கும் மலைக்கும் சிலேடை. கண் - விழியை; இடத்தை. ஏனம்மேனி வந்து - வராகமேனி வரப்பெற்று; ஆதிவராகமாகி: ஏனம் மேல் நிவந்து; ஏனம் - பன்றி; நிவந்து - பரவி. கண்ணன் எனும் - கரிய நிறத்தை யுடையவனென்று சொல்லப்படுகிற. மறைக்காடு - வேதாரணியம். பாசூரில் பாம்பு இறைக்கு ஆட்டினார்: திருப்பாசூரில் சிலகாலம் இருந்து அரசாட்சிசெய்த கரிகாலச்சோழனென்பவனைக் கொல்ல நினைந்து அவன் விரோதியாகிய ஒரு சிற்றரசன் குடத்தில் வைத்தனுப்பிய கொடிய

பாம்பொன்றைத் திருப்பாசூர்ப் பெருமான் ஒரு பிடாரவடிவமுற்றுவந்து பிடித்து ஆட்டி அப் பாம்பாலேயே அச் சிற்றரசனைக் கொல்வித்தாரென்பது, அத் தலபுராணத்துள் அரவமாட்டிய சருக்கத்திற் கண்ட வரலாறு; "வெற்றி யூருறை வேதிய ராவர்நல், ஒற்றி யேறுகந் தேறு மொருவனார், நெற்றிக் கண்ணினர் நீள வந்தனைப், பற்றி யாட்டுவர் பாசூ ரடிகளே" திருநா. தே. (உஎ)

28. திருத்தன் மகிழ்ந்துதவ நீடிமெய் யன்பர்
கருத்தை நிகர்க்குங் கழுக்குன்றே—வருத்தமுறு
மாலய மேயான் மருவா தருள்பூசல்
ஆலய மேயா னகம்.

(கு - பு.) அன்பர்கருத்துக்கும் மலைக்கும் சிலேடை. திருத்தன் - சிவபிரான். திருத்தனால் மகிழ்ப்பெற்று. தவம் நீடி - தவம் மிகுத்து; தவ நீடி - மிக உயர்ந்து. மால் அயமே - மயக்கத்தையும் ஐயத்தையும்; அயம் - ஐயம். யான் மருவாதபடி; ஏ: அசைநிலை. பூசல் ஆலயம் - பூசலாயனாரால் இதயத்தில் அமைக்கப்பெற்ற திருக்கோயிலில். (உஅ)

29. விண்டு பிரமன் விழைந்துகழு கைத்தொழுதல்
கண்டவா யேங்குங் கழுக்குன்றே—அண்டர்தொழும்
பாதத்தா னந்தம் பணிகொடிருப் பாணர்யாழ்
நாதத்தா னந்த னகர்.

(கு - பு.) பிரமன் விழைந்து கழுகைத் தொழுதல் விண்டு கண்டு அவாய் ஏங்கும்; விண்டு - திருமால்; அவாய் - விரும்பி; "கண்டவாயுள் ளேங்கும்" எனவும் பாடம். பிரமன் ஒருகற்பத்தில் கழுகுருவெடுத்துச் சிவபெருமான் திருமுடியைத் தேடினார் என்பது ஒருவரலாறு. "எனக்கழு கானவருன்னெமு னென்கொல், வானந்தல மண்டியுங் கண்டிலா வாறே" "பூவார் பொற் றவிசின்மிசை யிருந்தவனும் பூந் துழாய் புனைந்த மாலும், மோவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந் துறநாடி யுண்மை காணா" (திருநா. தே.); "கழுகுருவெடுத்து வேதன் ககனமுற் றருவிச் சென்றும், முழுவற வப்பாற் செல்லும் வலியிழந்து" (திருநாகைக் காரோணப் புராணம், பிரமன் பூசித்த. 20.) தான் அரன் முடியைக் காணாவிட்டாலும் தன்னைப்போன்ற கழுகு காணுதலால் அதைப் பிரமன் வணங்கினான். அதுகண்ட திருமால், "நாம் தொழுவதற்கு இத் தலத்தில் இறைவனை வழிபடும் பன்றி ஒன்றைக் காணப்பெற்றிலேம்" என்று ஏங்கினன் என்பது கருத்து. நந்தம் பணி



கொள் - நம்முடைய தொழும்பை ஏற்றுக்கொண்ட. திருநீலகண்ட யாழ்ப்பாணரது யாழின் நாதத்தில் ஆனந்தன். (உகூ)

0.. பூவைசம யத்தலைவர் போற்றுமொழி பாடவும்பர்
காவில் வணங்குங் கழுக்குன்றே—சேவையர்கோன்
தொண்டர் புராணஞ் சொலமுன் னருள்சுரந்த
அண்டர் புரா ணகம்..

(கு - பு.) பூவை - நாகணவாய்ப்புள். சமயத் தலைவர் - சைவசமயாசாரியர்களுடைய. போற்றுமொழி என்றது தேவார திருவாசகங்களை. வை மொழிகளைப்பாட. சேவையர்கோன் - சேக்கிழார். தொண்டர் புராணம் - பெரியபுராணம். அண்டர் புராணன் - தேவர்களுக்கு ஆதியாக ள்ளவன்; புராணம் - பழமை. (௩ய)

1. மீண்டு பெயினர்கணை விட்டுமுயல் வேட்டைசெயல்
கண்டுமதி யஞ்சுங் கழுக்குன்றே—பண்டைமறை
ஈட்டுமஞ்ச னத்த னிருபாலு மானான்பர்
ஆட்டுமஞ்ச னத்த னகம்.

(கு - பு.) எயினர் கணையை எவி முயல்வேட்டையைச் செய்தலை தி கண்டு அஞ்சும்; எயினர் - வேடர்; கணை - அம்பு; மதி அஞ்சியது ன்னிடமுள்ள முயலையும் அவர்கள் எய்வார்களோ என்பது பற்றி. மறை ட்டும் அஞ்சனையும் நத்தனையும் இருபாலுமானான்; அஞ்சன் - அன்னவாக த்தை உடைய பிரமன்; நத்தன் - சங்கை உடையவன்; திருமால்; அயனையும் அரியையும் முறையே வலப்பாலும் இடப்பாலு முடையராய் ஒற் றைத் திருவடியையுடையராய்த் தோன்றும் மூர்த்தி ஏகபாதருத்திரரெனப் டுவர்; "எழுலகு மாய்நின்ற வேக பாதர்" (திருவெண்காடு, திருத்தாண் கம், 2); "கண்ணுறு தற்பிரான் மருங்கிரு கடவுளர் கப்புவிட் டெனத் தோன்றும், வண்ண முத்தலைப் படை" (திருவிளை. ரு:ககக.) அன்பர் ஆட்டு ன்ற திருமஞ்சனத்தை உடையவன். (௩க)

2. அரனை யவமதித்த லாலன்பி னந்தி
கருடனைச் சீறுகழுக் குன்றே—அருளின்
உருத்தலை யூரார் கலிகிட முன்போர்
திருத்தலை யூரார் சிலம்பு.

(கு - பு.) கருடன் அரனை அவமதித்ததால் அன்பினையுடைய ந்தி அவனைக் கோபித்துச் சபித்தானென்பது இக் தலவரலாறு; (திருக்

கழுக்குன்றப். காருடச் சருக்கம்.) உருத்து அலை ஊர் ஆர்கலியில் தோன்றிய விடம்; ஆர்கலி - கடல். திருத்தலையூர் - உருத்திரபசுபதி நாயனர் அவதரித்த தலம். (௩௨)

33. மருவுமொரு நால்வேதம் வந்துகுன்ற மாகிக்
கருதவர நல்குகழுக் குன்றே—திருநடஞ்செய்
பாதாம் புயத்தர்விற் பார்த்தனடிக் கத்தழும்பு
மீதாம் புயத்தர் விழைவு.

(கு - பு.) நான்கு வேதங்களும் சிவாஞ்ஞையால் இம் மலைவடிவமுற்றிருக்கின்றன; சிவபிரான் மலைக்கொழுந்தாக எழுந்தருளியிருக்கின்றனர் என்பது வரலாறு; (திருக்கழுக்குன்றப். வேதகிரிச்.) நடம் செய் பாத அம்புயத்தர்; அம்புயம் - தாமரை மலர். பார்த்தன் அடிக்க மீது தழும்பு ஆகின்ற புயத்தர்; அடிக்க - அடித்தலால். (௩௩)

34. உய்வானோர் கோடி யுருத்திரர்கள் பூசித்துக்
கையாற் றொழுஞ்சீர்க் கழுக்குன்றே—மையார்விண்
வீசு பதத்தான் விரிஞ்சன் றொழவரியான்
பாசு பதத்தான் பதி.

(கு - பு.) கோடி உருத்திரர்கள் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றார்; (திருக்கழுக்குன்றப். உருத்திரகோடிச்.) மைஆர் - கருமை பொருந்திய. விண் வீசு பதத்தான் - விண்ணுலகை யளந்த பாதத்தை யுடைய திருமால்; விரிஞ்சன் - பிரமன்; அரியும் அயனும். விண்வீசு பதத்தானென்பதற்கு ஊர்த்துவ தாண்டவத்தை யுடையவ னென்றலுமாம். பாசுபதாஸ்திரத்தை உடையவன். (௩௪)

35. அன்னான் மொழிமறுத்த லானந்தி வந்துதவம்
கண்ணா வருளுங் கழுக்குன்றே—நண்ணியமான்
துஞ்சாக் கரத்தர் தொழுமன்பர் தாமறவாப்
பஞ்சாக் கரத்தர் பதி.

(கு - பு.) 'கருடனை வருத்தாதே' என்ற சிவபெருமானுடைய கட்டளையை மறுத்த திருநந்திதேவர் இத் தலத்தில் வந்து தவமியற்றி அக் குற்றத்தைப் போக்கிக் கொண்டனர்; (கழுக்குன்றப். நந்திதவச்.) கண்ண - கருத. மான் துஞ்சாத கரத்தை உடையவர். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உடையவர். (௩௫)



36. வாட்டமின்மார்க் கண்டரான் மாயிகன் பன்றியாக்
காட்டிற் றிரியுங் கழுக்குன்றே—நாட்டும்
அராப்பள்ளி யண்ணலறி துயின்மால் காணாச்
சிராப்பள்ளி யண்ணல் சிலம்பு.

(கு - பு.) மாயீகனென்னு மசுரன் பன்றியுருவங்கொண்டு வந்து இத் தலத்தைச் சார்ந்த காட்டிலுள்ள மிருகங்களை வருத்திக்கொண்டிருந்ததுகண்ட மார்க்கண்டேயர், அப் பன்றி யுருவோடே திரியும்படி அவனைச் சபித்தனர்; (கழுக்குன்றப். மாயீகச்.) அராப்பள்ளியை அண்ணிய நல்ல அறிதுயில் கொண்ட திருமால்; அராப்பள்ளி - பாம்பாகிய படுக்கையை. சிராப்பள்ளி - ஒரு தலம். (௩௬)

37. நேருமொரு மாதுபந்து தேடிப் பிழையுற்ற
காரியர்ச் சிக்குங் கழுக்குன்றே—சீரியமண்
பிட்டுக் களித்தான் பெருமுடியில் வைத்தடியும்
பட்டுக் களித்தான் பதி.

(கு - பு.) காரி - இந்திரன். ஒரு தெய்வப்பெண்ணினுடைய பந்தைத் தேடிச்சென்ற இந்திரன், வேறு வேடம் பூண்டு உமாதேவியாரோடு சதுரங்க மாடிக்கொண்டிருந்த சிவபெருமான் பக்கத்தில் அப் பந்து இருத்தல் கண்டு அப் பந்தைக் கவர்ந்தவர் அவரென்று நினைத்து அவரைச் சிவபெருமானென் றறியாமற் செய்த பிழையால் வந்த துன்பத்தை இத் தலத்தில் வந்து வழிபட்டுப் போக்கிக்கொண்டனன்; (கழுக்குன்றப். இந்திரச்.) பிட்டுக்குச் சீரிய மண்ணை அள்ளி; மண் பெருமுடியில் வைத்து அடியும் பட்டுக் களித்தான். (௩௭)

38. என்றும் பிருகு விசைத்தபடி புண்டரிகக்
கண்ணன்பூ சித்த கழுக்குன்றே—நன்றும்
மருமிக் களித்தார் வயங்களகப் பாடல்
தருமிக் களித்தார் தலம்.

(கு - பு.) புண்டரீகக் கண்ணன் - திருமால்; தாம் பிருகுமுனிவரது மனைவியைக் கொன்ற பாவத்தை இத்தலத்திற்கு வந்து இறைவனைப் பூசித்துப் போக்கிக் கொண்டார்; (கழுக்குன்றப். நாராயணச்.) மரு மிக்க அளி தார் - வாசனை மிகுந்த வண்டையுடைய மாலை. மிக்க அளி:தொகுத்தல் விகாரம்.அளகப் பாடல் - கூந்தலைப்பற்றிய பாடல்;என்றது "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகைப் பாடலை. தருமிக்கு அளித்தார். (௩௮)

39. விஞ்சியசா வித்திரிசொல் வெஞ்சாப நீங்கமலர்க்
கஞ்சன் பணியுங் கழுக்குன்றே—தஞ்சமெனச்
சுந்தரப்பே ரம்பெய்தார் சூழுஞ் சடைமுடிக்கண்
றந்தரப்பே ரம்பெய்தா ரார்வு.

(கு - பு.) தம்முடைய மனைவியருள் கலைமகளையே விரும்பி இருந்தமை பற்றிச் சாவித்திரியாற் சபிக்கப்பெற்ற பிரமதேவர் இத்தலத்திற்கு வந்து இறைவனைவழிபட்டு அச்சாபத்துன்பத்தை நீக்கிக்கொண்டார்; (கழுக்குன்றப். சதுமுகச்.) சுந்தரப்பேர் அம்பு - சுந்தரன் என்னும் பெயரை எழுதியுள்ள அம்பை; எய்தது மதுரைச் சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடலுள் ஒன்று. அந்தரம் பேர் அம் - ஆகாயகங்கை; அம் - நீர். (௩௯)

40. எண்மா வசுக்க ளியல்பொடுவெண் ணீறணிந்து
கண்மணிபூண் டேத்துங் கழுக்குன்றே—திண்மைமிகும்
கோளர வத்தினன் கூடா வகையருள்பூண்
வாளர வத்தினன் வாழ்வு.

(கு - பு.) கண்மணி - உருத்திராக்கம். காமதேனுவின் பாலைக்கறக்க முயன்ற எட்டாம்வசுவும், அச்செயலைத் தடைசெய்யாமலிருந்த ஏனைவசுக்கள் எழுவரும் அக்காமதேனுவாற் சபிக்கப்பெற்றுக் காசியில் நூறுவருஷம் புலையர்களாக மயானங்காத்திருந்து பின்பு இத்தலத்திற்கு வந்து வழிபட்டு அப்பிழை முற்றும் தீர்ந்துய்ந்தார்கள்; (கழுக்குன்றப். வசுதேவச்.) திண்மை மிகுந்த கோளர்அவத்தில் நான் கூடாவகை; கோளர் - கோள் கூறுவார்களது. பூணுகிய வாள் அரவத்தினன்; அரவம் - பாம்பு. (௪௦)

41. விதிசொற் படியரக்கர் வெம்மை தவிர்ப்பான்
கதிரவர் போற்றுங் கழுக்குன்றே—எதிரும்
செருவிற்கோ லத்தத் திகிரியனைக் கொண்ட
திருவிற்கோ லத்தர் சிலம்பு.

(கு - பு.) விதிசொற்படி அரக்கருடைய வெம்மையைத் தவிர்க்கும் பொருட்டுக் கதிரவர்கள் சிவபிரானைப் போற்றும் கழுக்குன்று; விதி - பிரமன்; அரக்கர் - மந்தேகர் என்னும் அசுரர். வெம்மை - இங்கே தடுத்தல். பன்னிரண்டு சூரியர்களும் பிரமாவின் கட்டளைப்படி இத்தலத்திற்கு வந்து வழிபட்டு மந்தேகர் முதலிய பகையசுரர்கள் நாள்தோறும் தமக்குச் செய்துவந்த இடையூற்றைப் போக்கிக்கொண்டனர். செருவில் - போரில். அத்தத் திகிரியானைக் கோலாகக் கொண்ட - கையில் சக்கராயுதத்தையுடைய திருமாலை அம்பாகக் கொண்ட. திருவிற்கோலம் - ஒருதிருப்பதி; இப்பொழுது அது திருக்கூவமென்று வழங்கப்படுகின்றது. (௪௧)



42. முனிவர்கணம் பாணினிய முன்னவனை வேண்டிக்
கனிவொடு வாழ்த்துகழுக் குன்றே—இனிதின்
இருக்கேத் திரத்த வெழில்கொள்சூ லத்தர்
குருக்கேத் திரத்தர் குடி.

(கு - பு.) கணம் - கூட்டம். பாணினியம் - ஒருவகை வியாகரணம். சில முனிவர்கள் இத்தலத்தில் இறைவனைப் பூசித்துப் பாணினிய வியாகரணத்தின் பொருளைத் தெளிந்தார்கள்; (கழுக்குன்றப், முனிகணச்.) இருக்கு ஏத்து இரத்த எழில்கொள் சூலத்தர்; இருக்கு - வேதம்; இரத்த எழில் - செந்நிறமுடைய அழகு. குருக்கேத்திரம் - குருக்ஷேத்திரம்; இது வைப்புத் தலங்களுள் ஒன்று. (௪௨)

43. சங்கரனார் சொன்மறுத்த தன்மையாற் சம்பாதி
கங்கெனவந் தேத்துங் கழுக்குன்றே—தங்கியவெங்
காமவே தத்தினன் கன்றா தளித்தானும்
சாமவே தத்தினன் சார்வு.

(கு - பு.) சம்பு ஆதி என்ற இருவர். கங்கு - கழுகு. இரண்டு முனிவர்கள் முத்தியை விரும்பித் தவம்புரியச் சிவபெருமான் கலியுகத்தில் முத்திபெறுவீர்களென்ன, இப்பொழுதே வேண்டுமென, மறுத்துக் கூறியதற்காக அவர் கட்டளைப்படி சம்பு ஆதி என்னும் பெயருடைய இரண்டு கழுகுகளாகிப் பூசிக்கின்றனர்; (கழுக்குன்றப். கங்காசலச்.) காம ஏதத்தில் நான் கன்றாது; ஏதம் - துன்பம். (௪௩)

44. துன்னுபன்றி மாயீகன் தொல்லுருவா வோர்பசுத்தான்
கன்னியுரு வான கழுக்குன்றே—என்னுள்
வதிய மலையார் மகிழுமிடப் பாலார்
பொதிய மலையார் பொருப்பு.

(கு - பு.) மார்க்கண்டேய முனிவராற் சபிக்கப்பெற்றுப் பன்றியுருவான மாயீகனும், நந்திதேவரது தவத்தைக் குலைக்கவந்து அவராற் சபிக்கப்பட்டுப் பசுவுருவான திலோத்தமையும், சுரகுருவென்னும் சோழவரசனுடைய அம்பினால் தம் சாபவுரு அழியப் பழைய உருவைப்பெற்றனர்; (கழுக்குன்றப். பசுவராகச்.) வதி - தங்குகின்ற. அமலையார் மகிழும் இடப் பாலார்; அமலையார் - உமாதேவியார். பொதியமலை - பொதியில்மலை; இது வைப்புத் தலங்களுள் ஒன்று. (௪௪)

45. கட்டங்கள் பாற்றுன்னக் காட்டுமலர் வாவிபோலாக்
கட்டங்கள் பாற்றுங் கழுக்குன்றே—கொட்டும்

தமருகக் கையான் றருபிழைசெய் தாலும்
தமருகக் கையான் றலம்.

(கு - பு.) கட்டங்கள் பால் துன்ன - நீராடற்குரிய துறைகள் தன்னிடத்துப் பொருந்த; கட்டம்: வடமொழிச்சிதைவு. பொல்லாத கஷ்டங்களைப் பாற்றும்; வாவி: எழுவாய்; வாவி பாற்றும் என்க. கொட்டும் தமருகம் கையான்; தமருகம் - உடுக்கை. தமர் உக கையான் - அடியார்கள் கெடும்படி வெறுதவன். (சரு)

46. கைப்புக நல்கால் கடுஞ்சினம்விட் டோரைநமன்
கைப்புக நல்காக் கழுக்குன்றே—செப்பும்வரை
மத்தகநாட் டத்தான் வளைபாற் கடனிறத்தான்
மத்தகநாட் டத்தான் வரை.

(கு - பு.) கைப்பு உகு அனல் கால்கின்ற கடுசினத்தை விட்டவர்களை. நமன்கையில் புகும்படி. வரை மத்து - மந்தரமாகிய மத்தை. அகம் நாட்ட தான்வளைந்த; வளை பாற்கடல் - சூழ்ந்த பாற்கடல்; தான் என்றது பாற்கடலை. மத்தக நாட்டத்தான் - நெற்றிக்கண்ணை உடையவர். (சசு)

47. காமிக வாக்குக் கருதியர்ச்சிப் போர்க்குமலர்
காமிக வாக்குங் கழுக்குன்றே—தோமறுகல்
வல்லிபங் கானார் வளர்கரும்புன் னைச்செய் தோர்
வல்லிபங் கானார் வரை.

(கு - பு.) காமிக வாக்கு - காமிகாகமத்தின் வாக்கை. மலரை சோலைகள் மிக ஆக்குகின்ற; கா - சோலை. ஆக்குதல் - இங்கே கொடுத்தல் என்னும் பொருளது. தோம் அறு கல் வல் இபம்; கல் இபம் - கல்லானை. கான் ஆர் வளர் கரும்பு; கான் - நறுமணம். கல் இபம் கரும்புண்ண. ஓர் வல்லி - உமாதேவியாருடைய. பங்கு ஆனார் - பாசத்தை விட்டு நீங்காதவர். (சஎ)

48. காட்டத் தெரியுங் கனல்வேள்வி வானுலகம்
காட்டத் தெரியுங் கழுக்குன்றே—நீட்டும்
விடமருந் தானார் விறலப்பர் தந்நோய்
விடமருந் தானார் விருப்பு.

(கு - பு.) காட்டத்தினால் எரியும் கனல் வேள்வி; காட்டம் - விறகு; என்றது சமிதையை. வானுலகங் காட்ட தெரியும்; காட்ட - காட்டுதலால்; தெரியும் - பலராலும் அறியப்படுகிற. விடம் அருந்துகின்ற. ஆனார் - இடபத்தை உடையவர். அப்பர் தம்முடைய சூலைநோயை விட்டுவிட மருந்து ஆனவர். (சஅ)

உ

# செய்தித் திரட்டு.

**உயர்திரு ஞானியார் சுவாமிகள்:**—திருக் கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவசாரிய சுவாமிகளின் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா, வைகாசி உஎஉ-யும் அடுத்தநாளும் அவர்களது திருமடத்திற் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பேரறிஞர்களாகிய அன்பர்பலர் வந்து குழுமியிருந்தனர். உஎஉ உதயம்முதல் நண்பகல் வரை சுவாமிகள் இஷ்டலிங்க பூசை, குருபூசை, முருகப் பெருமான் வழிபாடு, சாந்திக்குரியசடங்குகள், பாடலீஸ்வரர் வழிபாடு, அறுபத்துமூவர் வழிபாடு ஆதியவற்றைச் செய்தருளியபின், மாகேசுவர பூசை மாண்புடன் நடைபெற்றது. பிற்பகல் 4—மணிக்கு பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியார் அவைத்தலைமைவகித்து ஞானியார் சுவாமிகளின் நலங்களையும், தமிழ் வடமொழி ஆங்கிலப் புலமைத்திறனையும், சிறந்தவிரிவுரைகள் ஆற்றும் பெருமையையும் நன்கு விளக்கினர். பற்பல சபையாரும், பேரன்பர்களும் பெருமகிழ்வோடு கூடிய வாழ்த்துப்பாக்களைச் சுவாமிகளுக்குச் சமர்ப்பித்தனர். சைவமுந் தமிழுந் தழைக்கவந்த சுவாமிகளின் பெருமைகளை திரு. மணி. கோடீஸ்வரர் பிரசங்கித்தனர். சுவாமிகள் அன்பர்களின் மனங்கசிந்துருக இனிமையான பிரசங்கமாரி பெய்து, அனைவரையும் ஆசீர்வதித்து, சைவமுந் தமிழும் தழைக்கக் கல்லூரி நிறுவுவதற்கு ஒரு பதினாயிர ரூபாவும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு நூறு ரூபாவும், 'சித்தாந்தம்' பத்திரிகைக்கு ஒருதிங்கட் செலவும், லோகோபகாரி—செந்தமிழ்ச் செல்வி—சிவநேசன் பத்திரிகைகளுக்கு இருபத்தைந்து ரூபா விகிதமும் வழங்கினர். கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள், சைவத் தமிழ்க் கல்லூரி திறந்துவைத்து விரிவுரை நிகழ்த்தினர். அடுத்தநாள் மாலை 4 மணிக்கு அவைகூடியது. ஒருமணிநேரம் சங்கீதக் கச்சேரி நடந்தபின்னர், திருவாளர்களான டி. கே. சிதம்பரநாத முதலியார்—கா. சுப்பிரமணியபிள்ளை ஆகிய இருவர்களும் முறையே சமயவாழ்க்கை—தமிழர் நாகரீகம் என்னும் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினர். சுவாமிகள், திருவாளர் உமாமகேஸ்வரம் பிள்ளையவர்கட்குச் "செந்தமிழ்ப் புரவலர்" என்னும் சிறப்புப்பெயர் வழங்கி, பொற்பட்டாடையும் பூமாலையும் புனைந்தருளினர். பிள்ளையவர்கள் பணிந்தெழுந்து பரிவுடன் பெற்றனர். அனைவரும் பாராட்டினர். பிள்ளையவர்கள் நன்றி கூறினர். திருவாளர் சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் 'செந்நெறிச்செலவு' என்னும் சிறந்த விரிவுரை நிகழ்த்தினர். தலைவரின் முடிப்புரை, நன்றிகூறல், கடவுள்வாழ்த்துடன் திருவருளால் விழா இனிது நிறைவேறியது. பல பிரமுகர்களிடமிருந்து வாழ்த்துக் கடிதங்களும் தந்திகளும் வந்து படிக்கப்பெற்றன. சைவசித்தாந்த மகாசமாஜத்தார், முருகன் புகழ்நூல்—கிட்டாநுபூதிசாரம் என்னும் புத்தகங்களையும், சுவாமிகளின் மாணவர் திருவாளர் எஸ். கனகசபாபதி பிள்ளையவர்கள் உரையுடன் கூடிய திருமுருகாற்றுப்படையும் ஒவ்வொரு அன்பருக்கும் இலவசமாக வழங்கினர்.

**திருமயிலாப்பூர்:**—கபாலீசுவரர் திருக்கோயிலில், வைகாசி உஎஉ திருஞானசம்பந்த சுவாமிகள் திருமண மகோற்சவம் சிறப்பாக நிறைவேறியது.

**செந்தமிழ்ப்புரவலர்:**— திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தமது அறுபதாவதாண்டு நிறைவுவிழாவில், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்கட்குச் "செந்தமிழ்ப் புரவலர்" என்னும் சிறப்புப்பெயர் வழங்கினர். வழங்கவும் பெறவும் வண்டமிழ் மக்கள் போற்றவும் உரியதே.

**அகிலதனவணிக இளைஞர்சங்கம்:**—இப்பெயரால் ஒரு சங்கம் காரைக்குடியில் நிறுவி, பல விடங்களிலும் கிளைச்சங்கங்கள் வைத்து நடத்துவதாக, விதிமுறைகளுடன் வேண்டுகோட்பத்திரம் இரங்கூனிலிருந்து திருவாளர் ப. ராம. ப. சு. ராம. பழநியப்ப செட்டியார் முதலான பதின்மர் வெளியிட்டுள்ளார்கள்.

**ஆவினிப்பட்டி:**—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஏழாம் ஆண்டு முதல்மாசக் கூட்டம் 1—7—33 மாலை மாணவர் தமிழ்மறை ஓத, பி. அளகாபுரி திரு. மு. மு. ப. முத்தைய செட்டியார் தலைமை வகிக்க, 'செந்தமிழ் வனிதையின் சிறப்பு—சூது—கொடிது—பாரி—கடமை—யாக்கை நிலையாமை—பரிஹாசம்—சரீரசௌக்கியம்—ஒருநிலை வேண்டும்' என்ற அரிய பொருள்களை மாணவர் நன்கு சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் திரு. வ. மு. இரத்திநேசுவரையரால் மக்கள் கடமையும் அப்பர் பெருமையும் விரித்துப் பேசப்பெற்றன.

**மாங்கோட்டைக்குள் 16 கெஜம் துணி:**—சமீபத்தில் புனாவில்நடந்த பொருட்காட்சியில் பல விநோத சாமான்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று 16 கஜம் நீளமுள்ள நேர்த்தியான டாக்ன் மஸிலின் புடவையொன்றை மடித்து ஒருமாங்கொட்டைக்குள் அடைத்துவைக்கப்பட்டிருந்தது. இது பண்டைக்காலத்து இந்திய கைத்தொழிற்காரரின் திறமையை விளக்குகிறது.
ஷை பொருட்காட்சியில் மற்றொரு விநோதம் என்னவென்றால் பண்டைக்காலத்திய திசைக்கருவியாகும். அது வடக்கையும் தெற்கையும் காட்டுவதற்குப் பதிலாகக் கிழக்கு மேற்குத் திசையைக் காட்டுகிறது.

**கலப்புக் கல்யாணத்தைக் கண்டிக்கப் பட்டினி:**—ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும், ஸ்ரீதேவதாஸுக்கும் நடந்த திருமணத்தை சாஸ்திர விரோதமென்றும் அடாதசெயலென்றும் கண்டிக்கும் பொருட்டு இராணிப்பேட்டைக்கடுத்த மோசூர் பிராமண அக்ரகாரத்தில் ஸ்ரீ எம். எஸ். சர்மா என்பவர் 16—6—33 வெள்ளிக்கிழமை முதல் உபவாசமிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மூன்று வேளை ஜலம் மட்டும் சாப்பிடுகின்றாராம்.

**கொழும்பு:**—ஸ்ரீகதிர்வேலாயுதசாமி உபய கதிர்காமமாகிய வெள்ளவத்தைக்கு இம்மதி உ௰உ காலை எஇ மணிக்கு சர்வாபரண அலங்கிருதராய், திவ்விய சொர்ணமய தேசோன்னத அதிவிசித்திர விநோத இரதத்தின் மீது ஆரோகணித்து மேளதாள விருதுகளுடன் அடியார்குழாம் புடைசூழ்ந்து அரகர முழக்கம் செய்துவரத் திருவுலாப்போந்து அங்கமர்ந்து, அடியார்கள் செய்யும் வழிபாடுகளை யுவந்து, கதிர்காமக் காக்ஷியருளி, உ௰, உக, உஉ, உகூஉகளில் மாகேசுவர பூசாவைபவங் கண்டருளி, உகூஉ மாலை 4 மணிக்குத் திருவோலக்கங் கொண்டு, தமது இருக்கைசேர்ந் தருளுவர். பக்தசிரோமணிகள் வந்து தெரிசித்துத் திருவருளின்பம் பெறவேண்டுமென, பழைய கதிர்வேலாயுத சுவாமி கோயில்நகரத்தார் பத்திரிகை வழங்கியுள்ளார்கள்.



**செத்தவனுக்குப் புத்துயிர்:**—தென்னிந்தியா நாகர்கோயிற் பகுதியில் ஆறுமுகம் என்பவன் பாம்புகடித்து இறந்துவிட்டதாகக் கருதி அவன் பிணத்தை அவனுடைய சுற்றத்தவர்கள் தூக்கிச் சென்று மயானத்தில் வைத்து விறகு முதலியவையும் அடுக்கிக் கொள்ளி வைக்குந் தறுவாயில் அவ்விடத்திற்கு ஒரு வயதுமுதிர்ந்த துறவி வந்தார். அங்கு கூடியிருந்தவர்கள் இறந்தவனது மரணச்சடங்கு நடத்திக் கொண்டிருந்ததைக் கண்டார்.

ஆறுமுகநாடான் சென்றவாரம் ஒருநாளிரவு 8 மணிக்குத் தன் வயலிலிருந்து வீடுநோக்கி வரும்பொழுது அவனை ஒருகொடிய கருநாகந்தீண்டியதாம். உடனே அவன் மயக்கங்கண்டு கீழே விழுந்து விட்டதாகவும், பிறகு அவனை அவ்வழியே சென்ற ஒருமாட்டு வண்டிக்காரன் எடுத்து வீட்டிற்குக் கொண்டுவந்ததாகவுஞ் சொல்லப்படுகிறது. உடனே பலவைத்தியர் ஆறுமுகத்தின் தேகநிலையைப் பரீட்சித்தனர். அனைவரும் இனி ஒன்றுஞ் செய்வதற்கில்லையென்று கைநழுவவிட்டனர். அடுத்தநாட் காலையில் அவன் இறந்துவிட்டான் என்று நிச்சயித்து அவனது பிரேதத்தைத் தகனஞ் செய்ய மயானத்துக்கு எடுத்துச் சென்றனர்.

அங்கு வந்தபெரியார் இறந்தவனைப் பாம்புகடித்ததாகக் கேள்வியுற்று அவனை உயிர்பெற்றெழச் செய்வதாகச் சொன்னார். முதலில் அப்பெரியாரை ஒரு பைத்தியகாரனென்றே எல்லாரும் எண்ணினர். இருந்தபோதிலும் அவரிஷ்டப்படி சுற்றத்தார் சற்றுத் தாமதித்தனர்.

பின்னர் அப்பெரியார் ஒரு தோற்பையை யெடுத்து அதிலிருந்து சிறிது தண்ணீரை இறந்தவன் முகத்திற் றெளித்தார். பிறகு அரைமணிநேரம் சில மந்திரங்களை ஓதினார். திடீரென அவர் தனது வலதுகைச் சுட்டுவிரலை உயர நீட்டினார். எல்லாருங் கண்டு அதிசயிக்க இறந்தவன் தலைக்குமேல் பல கருடப்பட்சிகள் வந்து கூடின. ஒருமனிதனது உடலைப்போல அணிவகுத்து நிம்மதியாகச் சிறிதும் அசையாமல் ஆகாயத்தில் இருந்தன. அந்த நிழல் இறந்தவன் உடலைச்சரியாக மூடிற்று. அதேமாதிரி அப்பட்சிகள் சில நிமிஷகாலம் ஆகாயத்தில் இருந்து பிறகு மறைந்தன.
ஈமத்தில் அடுக்கப்பட்ட ஆறுமுகம் தன் கண்களைச் சிறிது விழித்துப் பார்க்க ஆரம்பித்தான். அவனுக்கு உயிர்மீண்டதைக் கண்டு அனைவரும் ஆச்சரியங் கொண்டனர். இச்சந்தடியில் அப்பெரியார் ஒருவர் கண்ணினும் புலப்படாது மாயமாய் மறைந்துவிட்டார். அவரைத் தேடியும் அகப்படவில்லை. ஒருமணி நேரத்திற்குள் ஆறுமுகம் உயிருடன் எழுந்து நடந்து வீட்டிற்குச் சென்றான். அனைவரும் அளவிலா ஆனந்தம் அடைந்தனர்.

**திருவாமாத்தூர்:**—கௌமார மடாலயம் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளது 35-வது மகாகுருபூசை, அவர்களது திருவருள் ஞானசமாதியாலயத்தில் ஆனி உகூஉ திருவோண நாளன்று, அபிடேக ஆராதனை சமாராதனை பிரசங்கங்களுடன் சிறப்பாக நிறைவேறியது.

**திருக்கழுக்குன்றம்:**—திரிபுர சுந்தராம்பிகைக்கு, இம்மதி கஉ தொடங்கி கஉஉ வரை ஆடிப்பூர மகோற்சவமும், சங்குதீர்த்தப் புஷ்பகர மகோற்சவமும் நடைபெறும். அன்பர்கள் வந்து தெரிசித்து இன்புறுக! என சுவாமி கருணானந்தா திருமுகம் வழங்கி யழைக்கின்றனர்.

**ஸ்ரீமான் சத்தியமூர்த்தி:**—ஆழ்வார் திருநகரியில் 18—6—33 மாலை ஒரு பொதுக்கூட்டத்தில், 'நாற்சந்தியில் இந்தியா' என்ற பிரசங்கத்தில், "மதம் போனால் இந்தியாவின் மகிமையே போய்விட்டதாகும். கடவுள் நம்பிக்கை—கடவுட்பக்தி அவசியம். மதத்தை வேருடன் பறித்தெறிய முயற்சிப்போர் தாங்கள் எதைப் பற்றிப் பேசுகிறோமென்றே அறியாதாராவர். இந்திய சரித்திரமும் இந்தியர்களின் கொள்கையும் அநுட்டானங்களும் அவர்களுக்குத் தெரியவே தெரியாது. சமூகப் பிளவுகளை நமக்குள்ளே சமரசமாகத் தீர்த்துக்கொள்வதை விடுத்துச் சட்டங்கள் மூலம் முயற்சிப்பது அழகல்ல." எனக் குறிப்பிட்டார்.

**கலப்புக் கல்யாணம்:**—தேவதாசும் இலட்சுமியும் பஞ்சமசாதியில் என் விவாகம் செய்துகொண்டிருக்கக் கூடாது? அப்படிச் செய்துகொண்டிருந்தாலல்லவோ, அவர்களின் இருமுதுகுரவர்கள் கொள்கையைப் பெரிதும் நிலைநாட்டியதாக இருக்கும்.

**மறுப்பும் விருப்பும்:**—அரசியற் சட்டமறுப்பு இயக்கத் தலைவர்களாகிய ஆசாரியாரும் அவர்சம்பந்தி காந்தியாரும், சமீபத்தில் தங்கள் மக்களுக்கு மணநடத்தி, அம்மணத்தை விருப்புடன் சிவில்சட்டப்படி பதிவு செய்துகொண்டார்களாம்.

**கம்பை:**—தனவைசியர் கல்விக் கழகத்தின் நான்காவதாண்டு அறிக்கை வரப்பெற்றோம். அதன்வரவு செலவுகளைக் கவனித்ததில் வரவுக்கு மீறிய செலவு காணப்பெறுவதால், வரவுக்குத் தக்கவாறு செலவை அளவுபடுத்திக் கொள்வது நலமாகும். போதிய மூலதனத்துடன் இக் கல்வி நிலையம் சீரியமுறையில் நடைபெற்று வருவது போற்றற்குரியதே.

**கோலாலம்பூர்:**—நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் ஐக்கிய மலாய்நாடு வர்த்தகசங்கத்தின் நான்காவதாண்டு அறிக்கை வரப்பெற்றோம். வர்த்தகத்துறையில் மிகவும் பேரார்வத்துடன் சங்கம் உழைத்து வருகிறதெனவும், இதற்கு 590 அங்கத்தினர்களும், 41 நிர்வாக அங்கத்தினர்களும் இருந்துவருகிறார்களெனவும் தெரியவருகிறது. சிங்கப்பூர் பினாங்கு இரங்கூன் சிலோன் நடப்புவட்டி தவணைவட்டி விவரங்களும், அரசாங்க விடுமுறைநாட்களும் இவ்வறிக்கையி லிணைக்கப்பெற்றுள்ளன.

**இலங்கை:**—நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் ஆறாவதாண்டு இரண்டாவதறிக்கையும், வருஷப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி விவரமும் வரப்பெற்றோம். வர்த்தகத்துறைகளையும், பிரயாண வசதிகளையும் சங்கம் மிகக் கவனித்துத் தனது கடமையை நன்றாற்றிவருகிறது. வைகாசி ௬௧௨ செட்டிநாடு பாங்க் ஏஜண்டு திரு. பி. எல். எம். சிதம்பரம் செட்டியாரவர்கள் தலைமை வகித்து முகவுரை கூறியபின், அறிக்கை வாசிக்கப்பெற்றது. திருவாளர்களான.—பெ. பெரி. சுப்பிரமணியன் செட்டியார், வ. ராம. வ. அ. இலக்குமணச் செட்டியார், செ. ராம. வள்ளியப்பசெட்டியார் ஆகிய மூவரும் முறையே, நமது சமூகமும் முன்னேற்றமும், இலங்கை நகரத்தார்கள் கடமை, நமது தொழில் முறை என்பனபற்றி விரிவுரை நிகழ்த்தினர். சிமுக வருடத்துக்கு நிர்வாகஸ்தர் அறுவரும், அங்கத்தினர்கள் ஐம்பத்தெழுவரும் ஆக அறுபான்மூவர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

உ

# செய்தித்திரட்டு.

---

**ஆகாயவிமானம்:**—திரு. ஆவுடையப்ப செட்டியார் புதிதாக வாங்கியது, ஜூலைமுதல் கானாடுகாத்தானில் தங்கியிருக்கிறது.

**திருப்பெருந்துறை:**—ஆனித் திருமஞ்சன மகோற்சவம் சீரும் சிறப்புமாக நிறைவேறியது. அரிமழம் திருவாளர் அ. அரு. அண்ணாமலை ஐயா அவர்களின் தரும நிலையமாகிய திருவாசக பாடகசாலையிலும், நேமத்துப்பட்டி திருவாளர்களான மு. பெ. வகையாரின் தருமநிலையமாகிய தரும சத்திரத்திலும், தனவணிக நகரத்தார்களின் பிறவேறு தரும நிலையங்களிலும், சிவநேசச் செல்வர்களான செட்டியார்களும் அன்பர் அடியவர்களாதியபலரும் மிகவிருப்புடன் வரவேற்று உபசரிக்கப்பெற்றனர்.

**தமிழ்ப்பரிசு:**—சென்னை சர்வகலா சங்கத்தார் நடாத்தும் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷையில், இவ்வாண்டில் முதன்மையாகத் தேறிய மறைத்திருவாளர் வித்துவான் கி. வா. ஜெகந்நாதையர் அவர்களுக்கு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தினரால் திரிசிரபுரம் டவுன்ஹாலில் ஆனி உ௬௨ திவான்பகதூர் ஸர். டி. தேசிகாசாரியார் அட்வகேட் அவர்கள் தலைமையில் ஓர் சபைகூட்டி ஆயிரரூபா பரிசு வழங்கப் பெற்றது. தலைவரும், மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலான பேரறிஞர்களும், திருப்பனந்தாள் ஆதீனத்தாரின் தமிழபிமானத்தையும், வித்துவான் ஜெகந்நாதையரவர்களின் தமிழ்ப் புலமைத் திறனையும் பாராட்டினர்.

**பர்மா நாட்டுக்கோட்டைச்செட்டியார் சங்கம்:**—இதற்கு ஆண்டுக் கட்டணம் பர்மாவிலுள்ள ஒவ்வொரு கடைக்காரரும் ரூபா மூன்று, அதிகமானால் ஐந்து செலுத்தினால் போதாதா? என்பது கவனிக்கத்தக்கதாகும்.

**காவிரிப்பூம் பட்டினம்:**—பல்லவனீச்சரத்தில் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா, இம்மதி ௧௧௨ முதல் ௨௨௨ வரை நடைபெறும்.

**காரைக்குடி:**—நாகநாதேசுவரர் பிரமோற்சவம் திருவாளர் பழ. செ. மு. முத்துக்கருப்பன் செட்டியாரவர்கள் பொருளுதவியினால், ஆரியம் தமிழ் எனும் இருவகை வேதபாராயணங்களுடன் மிகச் சீரும் சிறப்புமாக நிறைவேறியது. திருவாளர் முத்துக்கருப்பன் செட்டியாரவர்களின் சிவநேசமும் தியாகபுத்தியும் சீரியசெயலும் பாராட்டற்பாலவே.

ராவ்பகதூர் மரு. சு. சுப்பையா செட்டியாருக்குக் கவர்ன்மெண்டார் 'கெய்ஸரி ஹிண்டு' தங்கப் பதக்கம் வழங்கியதைப்பாராட்டி திவான்பகதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்கள் தலைமையில், காரைக்குடி மீனாக்ஷிசுந்தரேசர் வித்தியாசாலைக் கட்டிடத்தில், ஆனி உசு௨ மாலை மிகக் குதூகலமாகக் கொண்டாடப் பெற்றது.

186929

உ

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயவுண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மை யாதிய கட்டுரை பலவும் உலக [illegible]ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு ரூ | 2 4 0 | அதற்கு மூலதனம் ரூ | 30 0 0 |
| அயல்நாட்டிற்கு ரூ | 3 0 0 | அதற்கு மூலதனம் ரூ | 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை, சாத்திர நிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். [illegible]. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. [illegible]. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சுவேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர் மனதிற்குகந்தவண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.

பள்ளத்தூர்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.